15th October 2023

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 இதழ்: 01 பக்கங்கள் - 12 editor.uthayam@gmail.com

## உதயத்துக்கு வாழ்த்து



இன்று உதயமாகும் உதயம் சகல மக்களதும் ஐக்கிய குரலாக மிளிர வேண்டும் என்பது எனது பிரார்த்தனை என பிரபல தொழிலதிபர் எம்.ஏ.சீ. மௌசூம் தெரிவித்துள்ளார்.

உதயம் குறித்து வாழ்த்துச் செய்தியை விடுத்துள்ள இவர், தமிழ் பேசும் மக்களின் குறிப்பாக குரலற்றுள்ள முஸ்லிம் சமூகத்தின் குரலாக உதயம் மலரும் என்பது தனது நம்பிக்கை என்றும் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலையடுத்து முஸ்லிம்களால் நடத்தப்பட்ட பல பத்திரிகைகள் மூடப்பட்டுள்ளதையடுத்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை உதயம் நிறைவு செய்யும் என்பது எனது நம்பிக்கையாகும்.

வர்த்தக சமூகம் உதயத்திற்கு உதவுவதன் மூலம் தமிழ் பேசும் முஸ்லிம்களின் அபிலாஷைகளை வெளி உலகுக்கு தெரிவிக்கும் வாய்ப்பு கிடைக்கும். எனவே, குறிப்பாக முஸ்லிம் வர்த்தகர்கள் விளம்பரங்களை வழங்கி, இந்தப் பத்திரிகையை பலப்படுத்த முன் வர வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கின்றேன் என்றும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## காஸாவிலிருந்து வெளியேறு:

# இஸ்ரேல் அரசு அடாவடி



## மாட்டோம்: மாட்டோம்: பலஸ்தீனர்கள் விடாப்பிடி

காஸாவிலிருந்து 24 மணி நேரத்துக்குள் சகல பலஸ்தீனர்களும் வெளியேறுமாறு இஸ்ரேல் விடுத்த வேண்டுகோளை நிராகரித்துள்ள பலஸ்தீனியர்கள், "தாயகத்தை விட்டு வெளியேற மாட்டோம்" என உறுதியாகத்

11ம் பார்க்க >>>

## பயப்படதே: தைரியமாக இரு

### தந்தையை ஆறுதல்படுத்திய பலஸ்தீன் குழந்தை

பலஸ்தீன் – இஸ்ரேல் போரில் காயமடைந்த சிறுவன்

11ம் பார்க்க >>>

## போரை நிறுத்து:

# கொழும்பில் போராட்டம்



பாலஸ்தீன முஸ்லிம்களுக்கு எதிரான இஸ்ரேலின் பயங்கரவாத தாக்குதல்களை நிறுத்தக் கோரியும், பாலஸ்தீன

11ம் பார்க்க >>>



பள்ளிக்குள் தூள் வியாபாரம்:

## திறக்க அனுமதியோம்

### அமைச்சர் விஜேதாஸ கருத்துக்கு கண்டனம்

மஹர சிறைச்சாலையில் இருக்கும் பள்ளிவாசலுக்குள் தூள் வியாபாரம் நடப்பதனால் அதனைத் திறப்பதற்கு அனுமதிக்க முடியாது என நீதி சிறைச்சாலை சீர்திருத்த அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ

11ம் பார்க்க >>>



## நல்லிணக்க அரசியலே எனது பிரதான இலக்கு

### 17 இல் எம்.பியாகும் அலிசாஹிர் மௌலானா கருத்து

கிழக்கு மாகாணத்தில் மோதல் இல்லாத நல்லிணக்க அரசியலை முன்னெடுப்பதே எனது இலக்கு என மட்டக்களப்பு மாவட்டத்தின் ஶ்ரீலங்கா

11ம் பார்க்க >>>

## நஸீர் அஹமட் பதவி நீக்கம்: ஆராய நாடாளுமன்ற தெரிவுக்குழு?

உயர் நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் ஶ்ரீலங்கா

11ம் பார்க்க >>>

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த
தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

நேர்காணல்:
கியாஸ் ஏ. புஹாரி



# ஒவ்வொரு தடைகளும் எமக்கான வாய்ப்புக்கள்

## தொழிலதிபர் றிஸ்மி றியால்

உதயம் பத்திரிகையில் வலம்வரவுள்ள வர்த்தகர்கள், வியாபார முனைப்புகளில் உச்சம் கொண்டோர், சமூக செயற்பாட்டாளர்கள், சமூகத்திலுள்ள தேவைகளும் அவற்றை மக்கள் மயப்படுத்தலும் மற்றும் விஷேட திறமை கொண்டவர்களுடனான நேர்காணல்கள் என பயனுள்ள விடயங்கள் தொடராக வெளிவரவுள்ளது.
அவ்வாறு வலம்வரவுள்ள விடயங்களில் முதலாவதாக நேர்காணல் செய்யப்பட்ட வர்த்தகப் பிரமுகர் The Traveller Global Private Limited நிறுவனத்தின் தலைவர் றிஸ்மி றியால் வழங்கிய நேர்காணலின் தொகுப்பு இது:

**கே:** பொருளாதார நெருக்கடி கால கட்டங்களில் தொழில் முனைப்புகளில் ஈடுபடும் போது ஏற்பட்ட சவால்களை வெற்றி கொள்ள கையாண்டவைகள் எவை?

**ப:** பொதுவாக எந்தத் தொழிலும் தோல்வி என்பது அரிதாகவே இருக்கும், நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட் கால கட்டங்களில் எத்தனையோ தடைகள் ஒவ்வொரு வியாபாரத்திலும் தாக்கம் செலுத்தியது. இருந்தாலும், அவற்றுக்கு மாற்று வழிகளை கையாண்டு தொழில் துறைகளில் முன்னேற்றம் கண்டோர் பலர் பேர் உள்ளனர். எமது துறையை எடுத்துக் கொண்டாலும் சாதாரணமாக 6 பில்லியன் அளவில் மாதமொன்றுக்கான சுழற்சி வருமானமாக காணப்படுகின்றது.

இதில், பற்பல செலவீனங்களும், விலையேற்றங்களும் கெடுபிடியாகினாலும் நமது தன்னம்பிக்கையின் மூலம் வலுவான முன்னேற்றங்களை அடையலாம்.

**கே:** தற்போது பல இளைஞர்கள் மற்றும் நடுத்தர வயதினர் நாட்டின் நிலைமை சீரில்லை என்றுகூறி வெளிநாடுகளுக்கு செல்கிறார்கள். இவர்களின் இந்தப் பயணம் குறித்து உங்கள் பார்வை என்ன?

**ப:** சவால்களை எதிர்கொள்ள தைரியமில்லாதவர்கள்தான் இவ்வாறு முடிகளை எடுக்க வேண்டும். வாழ்க்கையில் பல்வேறு பிரச்சினைகள் எம்மை சூழ்ந்து நிற்கும் அவற்றுக்கெல்லாம் தீர்வு வெளிநாடு மாத்திரம்தான் என எண்ணிக் கொண்டு வெளிநாடுகளுக்கு செல்வது புத்திசாலித்தனமல்ல. இதிலிருந்து நாம் மாறுபட்டவர்களாக வர வேண்டுமாயின் நமது முயற்சிகள் திடமாக அமைய வேண்டும். மாறாக நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்தது என்று வெளிநாடு சென்றால் பிரச்சனைகள் அத்தனையும் தீர்ந்துவிடும் என்ற கருத்து தவறானது.

ஒருவர் வெளிநாடு சென்றுவிட்டால் சாதாரணமாக 10 மணித்தியாலங்கள் வேலை செய்கிறார்கள் மற்றும் மணிக் கணக்கில் மேலதிக நேர வேலை செய்கிறார்கள் இப்படி தங்கள் சக்தியை பூரணமாகக் கொடுத்துதான் சம்பளங்களை பெறுகின்றனர்.

அப்படியெல்லாம் சம்பாத்தியம் செய்வது இன்றுள்ள நிலையில் சரியாயினும் பிற்பட்ட காலங்களில் சொந்த நாட்டில் தங்கள் தொழில்துறைக்கான அடித்தளங்கள் கேள்விக்குறியாகிறது.

அது மாத்திரமல்ல இங்கிருந்து பலரும் வெளிநாடுகளுக்கு தொழிலுக்காக செல்லச் செல்ல அந்த தொழில் வெற்றிடங்களை மற்றொருவர் பூர்த்தி செய்தால் மீண்டும் அதே இடத்தை இவர்களால் அடைவதென்பது பெரும் சவலாகிவிடும்.

பொதுவாக எமக்கு ஏற்படும் ஒவ்வொரு தடையும் எமக்கான வாய்ப்புக்கள். அது பொருளாதார நெருக்கடியாக இருக்கலாம், கொவிட் காலாமாக இருக்கலாம் அல்லது நாட்டில் ஏற்படுகின்றன வேறு அசாதாரண சூழலாகவும் இருக்கலாம். எதுவாயினும், ஒரு கெடிபிடிக்குள் நாம் சிக்கிக் கொள்கிறோம் என்றால் அவை நமது வெற்றிப் படிக்கான வாய்ப்பு என்பதை மனதில் கொண்டால் நிச்சயம் வெற்றியடையலாம்.

**கே:** நிலைமை இவ்வாறுள்ள போதிலும் வெளிநாடுகள் இலங்கையர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வேலைக்கு சேர்ப்பதற்கான காரணங்கள் குறித்த உங்கள் கருத்து என்ன?

**ப:** உண்மையில், இலங்கையானது சிறந்த வளங்களை கொண்ட நாடு. இங்கு நில அமைப்பில் எந்தளவு வளங்கள் நிறைந்துள்ளதோ அதை விட பல மடங்கு மனித வளமும் உள்ளது. அவற்றை நாம் சரியாக பயன்படுத்த வேண்டும்.

அது மாத்திரமன்றி இலங்கையர்களின் பண்புகளை வெளிநாடுகள் அதிகம் நேசிக்கின்றன. அதனால் அவர்கள் எமது நாட்டுவர்களுக்கு அதிக முன்னுரிமை வழங்குகிறன. இது எமது நாட்டவர்களின் திறமைக்கு கிடைத்த மகுடம். ஆனால், துரதிஷ்டம் நமது நாடு அவற்றை உணர்ந்து கொள்ளததால் மக்கள் தத்தளிக்கின்றனர்.

**கே:** இன்றைய கால கட்டத்தில் பத்திரிகைகள் அரிதாகிய வண்ணம் உள்ளன, அவற்றை முன்கொண்டு செல்வதற்கான வளங்கள் போதியளவில்லை. இது விடயத்தில் ஒரு தொழிலதிபர் என்கிற வகையில் உங்களது கண்ணோட்டம் யாது?

**ப:** இப்போது நீங்கள் பார்த்தீர்களானால் இலத்திரணியல் ஊடாகவே வசகர்களின் கவனம் முன்னோக்கி நகர்கிறது.

அதே நேரம் ஒரு சம்பவம் நடந்த அதே செக்கனில் சமூக வலைத்தனங்கள் மற்றும் ‘வெப்’ தளங்கள் ஊடாக உடனுக்குடன் செய்திகளை பார்வையிடக் கிடைக்கின்றன.

இனிவரும் யுகத்தில் இலத்திரணியல் மாத்திரம்தான் செல்வாக்குச் செலுத்தக்கூடிய அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

அவை மாத்திரமன்றி மக்களிடம் இலத்திரணியல் பாவனை அதிமாகின்ற வகையினால் இனிவரும் காலங்களில் இலத்திரணியல் ஊடகங்கள்தான் செல்வாக்குச் செலுத்தப் போகின்றன. ஆகையால், அவ்வாறான தொழில்நுட்ப உலகிற்குள் ஒவ்வொரு ஊடகங்களும் மாற்றம் கண்டால் மாத்திரமே வெற்றி கொள்ள முடியும்.

# கலாபூஷணம் விருது பெற்ற அண்ணாவியார் ஏ. இஸ்ஸதீன்



(எம்.எஸ். எம். ஸாகிர்)

2022ஆம் ஆண்டுக்கான கலாபூஷணம் அரச விருதினை சாய்ந்தமருதைச் சேர்ந்த சிரேஷ்ட அண்ணாவியார் ஏ. இஸ்ஸதீன் பெற்றுக் கொண்டார்.

கலைஞர்களுக்கான மகுடம் சூட்டும் 38 ஆவது கலாபூஷணம் அரச விருது விழா – 2023 புதனன்று (11) மஹரகம தேசிய இளைஞர் சேவை மன்ற மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை ஜனநாயக சோசலிச ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சாய்ந்தமருதில் கோலாட்டம் எனும் பொல்லடிக் கலையை முறையாகப் பயின்று, சிறந்த முறையில் அதனை வளர்ந்து வரும் பொல்லடிக் கலைஞர்களுக்கு பயிற்றுவித்துக் கொண்டிருக்கும் சிரேஷ்ட அண்ணாவியார் ஏ. இஸ்ஸதீன் கலாபூஷணம் அரச விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# நுழைவு பரிட்சை: அநீதிக்கு எதிராக முறைப்பாடு



கொழும்பு ரோயல் கல்லூரி மற்றும் மஹாநம கல்லூரிகளில் நடந்த சட்டக்கல்லூரிக்கான நுழைவு பரிட்சையில் (30/ 09/ 2023) முஸ்லிம் மாணவிகளுக்கு பரிட்சை மேற்பார்வையாளர்களால் ஏற்படுத்த பட்ட அநீதி தொடர்பாக கடந்த வியாழனன்று (12/10/2023) மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப் பாடு செய்யப்பட்டது.

முறைபாட்டாளர்களான சட்டமானவர் முஸ்லிம் மஜ்லிஸ் உறுப்பினர்கள் சார்பாக சட்டத்தரணிகள் இர்பானா இம்ரான், நுஷ்ரா சரூக் மற்றும் நாளனி இளங்கோன் ஆகியோர் சமூகமளித்தனர்.

# மன்னாரில் தேசிய மீலாத் விழா

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இவ்வாண்டின் (2023) தேசிய மீலாத் விழா எதிர்வரும் 22ஆம் திகதி மன்னார் மாவட்டத்தில் நடைபெறும் என முஸ்லிம் சமய கலாசார பணிப்பாளர் பைசல் ஆப்தீன் தெரிவித்தார்.

புத்தசாசன சமய விவகாரங்கள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரம நாயக்கவின் தீர்மானத்திற்கமைய தேசிய மீலாத் விழா கொண்டாட்டங்களுக்கென மன்னார் மாவட்டம் தெரிவாகியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளும் இந்த நிகழ்வுடன் இணைந்ததாக மன்னார் மாவட்டத்தின் பல அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், பிரதமர், அமைச்சர்கள், சபாநாயகர், பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டுத் தூதுவர்கள், ராஜதந்திரிகள், உலமாக்கள், புத்திஜீவிகள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பிரதி புதன்தோறும் உதயம் பத்திரிகையை உங்கள் பார்வைக்கு பெற்றுக்கொள்ள இங்குள்ள QR ஐ Scan செய்து எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து கொள்ளுங்கள்
www.uthayam.lk

# டிஜிட்டல் மயமாக்கலுக்குள் பிரவேசிக்கும் வாய்ப்பு இலங்கையர் அனைவருக்கும் கிடைக்க வேண்டும்

## - தேசிய தகவல் தொழில்நுட்ப மாநாடு 2023 இல் ஜனாதிபதி தெரிவிப்பு

டிஜிட்டல் மயமாக்கலுக்குள் பிரவேசிக்கும் வாய்ப்பு இலங்கையர் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அதற்குரிய அடிப்படை டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளை தனியார் துறையின் தனிப்பட்ட முதலீடுகள் மூலம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்பதோடு, தனியார் துறையினருக்கு கிட்டாத வாய்ப்புக்களில் அரசாங்கம் தலையீடு செய்ய வேண்டும் என்பதே தன்னுடையதும் அரசாங்கத்தினதும் நிலைப்பாடாகும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், குறைந்தளவான வளங்களை கொண்டுள்ள தருணத்திலேயே, டிஜிட்டல் மயமாக்கலுக்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை அரசாங்கம் செய்துகொள்ள வேண்டியிருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கொழும்பு ஷங்ரீலா ஹோட்டலில் அண்மையில் நடைபெற்ற தேசிய தகவல் தொழில்நுட்ப மாநாடு 2023 - (ஜேவுஊ - 2023) இல் பிரதம அதிதியாக கலந்துகொண்டிருந்த போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி,




"மனித வள அபிவிருத்தி துறையில் அனைத்து விடயங்களையும் நாம் உள்வாங்கியுள்ளோம். அடுத்ததாக மனிதவள மூலதனத்தை எவ்வாறு பெற்றுக்கொடுப்பது என்ற பிரச்சினைக்கு எழுந்துள்ளது. இன்று இங்கு முன்மொழியபட்ட இரு அறிக்கைகளையும் செயற்படுத்தும் முன்பாக அது தொடர்பாக ஆராய்ந்து பேச்சுவார்த்தைகளை நடத்த எதிர்பார்க்கிறோம்.

மனித மூலதனத்தை போன்றே டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொள்வதும் சவாலாகியுள்ளது. அதேபோல் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் குறைந்தளவான வளங்களுடனேயே நாம் டிஜிட்டல் வசதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.


அதனால் தனியார் துறையினரின் தனிப்பட்ட முதலீடுகள் வாயிலாக உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். தனியார் துறையினால் அடைந்துகொள்ள முடியாத விடயங்களில் அரசாங்கம் தலையீடு செய்ய வேண்டும்.

அதற்கமைய டிஜிட்டல் வசதிகள் தொடர்பிலான எமது கொள்கை மேற்படி விடயத்தை மையப்படுத்தியதாக நடைமுறைப்படுத்தப்படும். அதேபோல் மேல் மாகாணத்தின் கம்பஹா, கொழும்பு, களுத்துறை மாவட்டங்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்த வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக உள்ளது. அதன் பின்னர் அதிக சனத்தொகை கொண்ட பகுதிகள் மற்றும் நகரங்களை நோக்கி நகர வேண்டும். அதேபோல் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளை விநியோகிப்பவர்களும் முதலீடுகளை எதிர்பார்த்துள்ளனர். - என்றார்.





ஐக்கிய அரபு இராச்சியத்தின் பொருளாதாரம் மற்றும் வர்த்தக விவகாரங்கள் துறை அமைச்சர் அஹ்மத் பின்த் அலி அல் - ஷயேக் மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடலொன்று கடந்த புதனன்று (10) தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இடம்பெற்றது. இக் கலந்துரையாடலில் சமூக நலன் சார்ந்த விடயங்களை முன்னெடுப்பதற்கான ஒரு தளமாக IORA ஐ வாய்ப்பாக கொள்ள வேண்டும் எனவும், மேலும் இரு நாடுகளினதும் உறவுகளை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.







www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

2023 OCTOBER 15 - SUNDAY

WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

## உதயத்தின் முதலாவது தலையங்கம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல், சுனாமி, கொரோனாத் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி என்பன காரணமாக நாட்டில் வெளியான பல பத்திரிகைகள் இரவோடிரவாக மூடப்பட்டன. தமிழ் பேசும் மக்களால் நடத்தப்பட்ட பல ஊடகங்களும் இவ்வாறு மூடப்பட்டன. அதிலும் குறிப்பாக முஸ்லிம்களால் நடத்தப்பட்ட எல்லாப் பத்திரிகைகளுமே மூடப்பட்டன.

ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை எதிர்கொள்ளும் நோக்கில் உதயம் இன்று உங்கள் கரங்களில் தவழுகின்றது.

உங்களின் இருளகற்றும் தனித்துவக் குரலாக உதயம் உதிக்கின்றது.

சமூகங்களை ஒன்றுபடுத்துவது உதயத்தின் பிரதான இலட்சியங்களில் ஒன்றாகும். சமூகங்களை ஒன்றுபடுத்தாவிடின் நமது நாட்டின் எதிர்காலம் தொடராக கேள்விக்குறியாகவே இருக்கும். இதனை உணர்ந்த வண்ணமே உதயம் தொடர்ந்து செயற்படும்.

குரலற்ற மக்களின் குரலாக உதயம் செயற்படும். மக்களுக்கு குறிப்பாக சிறுபான்மை மக்களுக்கு இடம்பெறும் அநீதிகள், பாரபட்சங்களை அம்பலப்படுத்தி, அவற்றுக்குத தீர்வு பெற்றுக் கொடுப்பது உதயத்தின் மற்றொரு பிரதான இலட்சியமாக அமையும். பத்திரிகை தர்மத்தைப் பேணிச் செயற்படுவதற்கு முன்னுரிமை அளிக்கும்.

ஆசிரியர் சங்கத்தின் ஒழுக்க விதிகளைப் பேணி நடக்கும்.

பத்திரிகைகளில் வெளியாகும் ஆக்கங்களினால் ஒழுங்கு விதிகள் மீறப்பட்டு யாருக்காவது பாதிப்பு ஏற்படுமாயின் அதற்கான பதிலை வெளியிடுவதற்கு உதயம் என்றும் தயாராக இருக்கின்றது. ஒழுக்க விதிகள் மீறப்படுமாயின் அது தொடர்பாக பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கோ, இலங்கை பத்திரிகைப் பேரவைக்கோ வாசகர்களுக்கு முறைப்பாடு செய்யலாம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையிலே இந்த நாட்டின் முன்னேற்றம் தங்கியுள்ளது. நாட்டு மக்களை இந்த வழியில் அழைத்துச் செல்வதே உதயத்தின் மற்றொரு நோக்கமாகும். உதயம் உங்களது குரலாகவே இருக்கும். உதயத்தின் வெற்றி வாசகர்களாகிய உங்களது கரங்களிலேயே தங்கியுள்ளது. என்றும் நாம் உங்கள் ஆலோசனைகளை வரவேற்கின்றோம். உங்கள் ஆதரவினையும் ஆலோசனையினையும் உதயம் வேண்டி நிற்கின்றது.

முஸ்லிம் சமூகத்தினால் வெளியிடப்பட்ட நவமணி, எங்கள் தேசம், மீள் பார்வை போன்ற பத்திரிகைகள் மூடப்பட்டது முதல் முஸ்லிம் சமூகத்தின் சார்பில் தொடர்ச்சியான கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலே உதயம் உதயமாகியுள்ளது.


இதனை வளர்த்தெடுப்பது உங்களது பொறுப்பாகும். குறிப்பாக வர்த்தக சமூதத்தினர் விளம்பரங்களை இயன்ற அளவில் வழங்கி, இந்தப் பத்திரிகையை வளர்க்க வேண்டும். அதாவது நாட்டில் வாசிப்புப் பழக்கம் இன்று எம் சமூகத்தின் மத்தியில் குறைந்துள்ள நிலையில், இப் பத்திரிகை மூலம் குறைந்தபட்சமாக வாசிப்பு பழக்கத்தையாவது மேம்படுத்த முடிவு என்பது எமது நம்பிக்கை.

முஸ்லிம் சமூகத்தின் பல தசாப்த காலமான அவா முஸ்லிம்க ளுக்காக குரல் கொடுக்கவல்ல பலமான ஊடகம் வேண்டும் என்பதாகும். ஆனால், முஸ்லிம் சமூகத்திற்கான ஊடகங்கள் நீடித்து நிலைப்பதற்கும் தாக்குப்பிடிக்கவும் முஸ்லிம் சமூகத்தின் பலமான ஒத்துழைப்பு அவசியமாகின்றது.

கடந்த காலங்களில் இத்தகைய ஊடகங்களுக்குக் கிடைத்த கசப்பான அனுபவங்களுடன் நாம் இன்று மற்றுமொரு ஊடகப் பயணத்தில் காலடி வைக்கின்றோம். அதனால் இந்த ஊடகத்தை வளர்த்தெடுப்பது உங்கள் பொறுப்பு என்பதை வலியுறுத்து கின்றோம்

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்) **“உதயம்”**
இன்றிலிருந்து வாசகர்கள் மத்தியில் வலம்வரவுள்ளது.
இப் பத்திரிகைக்கு தங்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள **QR** ஐ **Scan** செய்வதனூடாக எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும் இலவசமாக பார்வையிடலாம்...

அத்துடன், உங்களது பிரதேசங்களில் இடம்பெறும் செய்திகளையும் எமது மின்னஞ்சல் ஊடாக எமக்கு அனுப்பி வைக்க முடியும்.
editor.uthayam@gmail.com



# 2024 தேர்தல் ஆண்டு தடம்புரளும் ரணிலின் வியூகம்



எம்.ஏ.எம். நிலாம்

அடுத்த மூன்று மாதங்களில் மலரவிருக்கும் 2024 ஆம் ஆண்டு இலங்கையின் தேர்தல் ஆண்டாக உதயம் பெறவுள்ளது. இந்த ஆண்டில் எந்தத் தேர்தல் நடக்காது போனாலும் ஜனாதிபதித் தேர்தல் நடந்தே ஆக வேண்டிய நிலை உறுதியானதாகும். மக்கள் ஆணை பெறாத ஒரு ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவி வகிக்கின்றார். 2024 இறுதிக்குள் அடுத்த நிறைவேற்று அதிகாரத்திற்கான மக்கள் ஆணையைப் பெற வேண்டிய அவசியம் உள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்கான ஆரம்பப் பணிகளை அனைத்துக் கட்சிகளும் முடுக்கி விட்டிருப்பதை நன்கு அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இந்தத் தேர்தலுக்கான நிதியை ஒதுக்குவதற்கு புதிய வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதை அரசு வட்டாரத்திலிருந்து தெரியவந்துள்ளது. கடந்த காலத்தில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்கள் பின் போடப்பட்டாலும் இந்த ஜனாதிபதித் தேர்தலை தள்ளிப் போட முடியாது. அடுத்த வருட இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டேயாக வேண்டும்.

பிரதானமான கட்சிகள் சகலதும் போல் அதற்கான ஆரம்பப் பிரசாரப் பணிகளை முடுக்கி விட்டுள்ளன. இத்தேர்தலானது பல முனைப் போட்டியாகவே காணப்படலாம். மொட்டுக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் தேசிய மக்கள் கட்சி (ஜேவிபி) யும் வேறு சில பெரும்பான்மைக் காட்சிகளும் சிங்களப் பெரும்பான்மை வாக்கு வங்கியை இலக்கு வைத்து வியூகங்களை அமைத்து பிரசாரப் பணிகளை முடிக்கிவிட்டிருக்கின்றன. அதேசமயம் சிறுபான்மை தமிழ் முஸ்லிம் வாக்கு வங்கியையும் அக்கட்சிகள் தமதாக்கிக் கொள்வதில் முனைப்புக் காட்டினாலும் அந்த வாக்கு வங்கியைப் பெற்றுக் கொள்வதற்கு தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவைத் திரட்டுவதிலும் ஆர்வம் காட்டத் தவறவில்லை என்பதை அவதானிக்கக் கூடியதாகவே இருக்கின்றது.

இத்தேர்தல் களத்தில் பலமுனைப் போட்டியென்று குறிப்பிட்ட போதிலும் முக்கியமாக இதனை மும்முனைப் போட்டியெனக் கொள்வதே நிதர்சனமானதாகும். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சி மொட்டுக் கட்சியை இணைத்துக்கொண்டு பயணிப்பதை அவதானிக்க முடிகிறது. ஏனெனில், மொட்டுக் கட்சி இதுவரையில் தனித்துப் போட்டியிடுவதை மறைமுகமாகத் தவிர்த்து வருகின்றது. அடுத்து தேசிய மக்கள் சக்தி (ஜேவிபி) தலைவர் அனுரகுமார திசாநாயக்கவும் ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாசவும் நேரடிப் போட்டியாளராகக் காணப்படுகின்றனர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இத்தேர்தலில் நேரடியாகக் களமிறங்குவதைத் தவிர்த்தே வருகின்றார். அக்கட்சியின் ஸ்தாபகரான பெசில் ராஜபக்ஷவுக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இடையில் கருத்து முரண்பாடு அதிகரித்து இன்று அது விஸ்வரூபமெடுத்துள்ளதால் மொட்டுக் கட்சி தேர்தல் விடயத்தில் தடுமாற்றமடைந்து இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ தனது மகன் நாமலை முன்னுக்குக் கொண்டுவரும் பிரயனத்தனத்திலிருக்கிறார். பெசில் அதற்கு கடும் எதிர்ப்பை வெளிக்காட்டி வருகின்றார். இது மொட்டுக் கட்சிக்குள் இருக்கும் பெரும்பாலான எம்.பி.க்கள் ரணில் பக்கம் சாடத் தொடங்கியுள்ளனர். எனவே, பெரும்பாலும் மொட்டு,ஐக்கிய தேசியக் கட்சி தரப்பில் ஒரே வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்கும் நிலையே காணப்படுகின்றது. ரணிலின் இந்த வியூகம் பௌத்த சிங்கள வாக்கு வங்கியை வென்றெடுப்பதிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. அதன் ஒரு பிரதிபலிப்பே ஜெர்மனிய ஊடகத்துக்கு ரணில் வழங்கிய போட்டியாகும். அவரது அந்த ஊடக நேர்காணல் மேற்குலகை சினம் கொள்ள வைத்துள்ளது. தற்போதைய நிலையில் அது குறித்து ரணில் கவலைப்படவில்லை ரணிலில் இந்தப் புதிய வியூகம் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்ததாகவே அமையப் பெற்றுள்ளது. ரணிலின் இந்த செயற்பாடு இதுவரை காலமும் அவர் கடைப்பிடித்த போக்குக்கு முற்றிலும் மாறுபட்டதாகவே காணப்படுகிறது. அவர் தனது வியூகப்பாதையில் தடம் புரண்டிருப்பதையே அவதானிக்க முடிகிறது.

ரணில் விக்கிரமசிங்க கடந்த கால ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிட்ட போதும் அவரால் வெற்றி கொள்ள முடியாது போனது. இந்த நிலையில் ஆரம்பத்தில் அன்றைய இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவை பொது வேட்பாளராக களமிறக்கிய போதும் அதில் அவரால் வெற்றி கொள்ள முடியாது போனது. அடுத்து 2015இல் மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளராகக் களமிறக்கப்பட்டார். அதில் மைத்திரிபால வெற்றியீட்டினார். ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார். இடையில் ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கி, மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக மைத்திரிபால சிறிசேன நியமித்ததால் அரசுக்குள் குழப்ப நிலை உருவானது.

52 நாள் போராட்டம் இறுதியில் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் ரணில் மீண்டும் பிரதமரானார். இதனால் மைத்திரிபால மீதான எதிர்ப்பு வலுவடையத் தொடங்கியது. அந்த முறுகல் 2019 வரை நீடித்தது.

2019 தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளராக சஜித் பிரேமதாச பொது வேட்பாளராக களமிறக்கப்பட்டார். ஆனால், மொட்டுக் கட்சி வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷ களமிறங்கினார். பௌத்த சிங்கள இனவாத பிரசாரங்களால் மக்கள் கவரப்பட்டு 69 லட்சம் என்ற பெரும் எண்ணிக்கை வாக்குகளால் அவர் வெற்றி பெற்றார். ஆனால், கோட்டாபயவால் நல்லாட்சி ஒன்றைக் கொண்டு நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. சிங்கள மக்களே அவருக்கு எதிர் எதிராகத் திரண்டனர். கோட்டா வீட்டுக்குப் போ (கோட்டா கோ ஹோம்) என்ற கோஷத்துடன் அரகலயப் போராட்டம் தலைதூ க்கியது. ஜனாதிபதி செயலகப் பகுதி முற்றுகையிடப்பட்டது. அரசியலுக்கு முகம் கொடுக்க முடியாமல் அரகலயவிற்கு முகம் கொடுக்க முடியாமல் கோட்டா பதவி விலகினார். அடுத்து இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டார். அவர் பாராளுமன்ற உறுப்பினர்களின் நம்பிக்கையில் வெற்றி கொண்டு ஜனாதிபதியாக பதவியைத் தொடர்கின்றார்.


பொருளாதார நெருக்கடிக்குள்

தொடரச்சி 11ம் பக்கம் பார்க்க >>>

# கட்சித்தாவலில் கச்சிதமாக கையாள வேண்டிய காய்கள்!



- சுஐப் எம். காசிம்-



தலைமைத்துவங்களின் ஆளுமைகளை உரசிப்பார்க்கும் விஷப்பரீட்சைதான் கட்சித் தாவல்கள். பல நோக்கங்களில் கட்சித்தாவல்கள் இடம்பெறுகின்றன. இஷ்டமின்றி மாறுதல், அதிகாரங்களுக்காக மாறுதல் இன்னும் வெற்றிக்காக மாறுதலென பல தரங்கள் இதிலுள்ளன. இவ்வாறு தாவாமல் கட்டுக்கோப்பில் வைத்திருப்பதுதான் ஆளுமை.

வேட்பாளரின் வெற்றிக்கு வழிகோலுவது கட்சியின் செல்வாக்கா? அல்லது தனிநபரின் பிரபல்யமா? இதிலிருந்து எழும்பிய இழுபறிதான் கட்சித்தாவல்களுக்கும் வழியேற்படுத்துகிறது. இவ்வாறு கட்சித்தாவுவோர் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்க எடுக்கும் முயற்சிகள் தருணம் தப்பினால் தலையிலடி என்றுள்ளது.

இச்சிக்கல்களிலிருந்து தப்பிக்க இவர்கள் கற்பிக்கும் நியாயங்கள் விகிதாசாரத் தேர்தலுக்குப் பின்னர்தான் விசித்திரமாகி வருகிறது. தேசத்தின் நலன் கருதி, சமூக தேவைப்பாடுகளை எண்ணி, இன்னும் தலைமைகளின் சர்வாதிகாரத்தை எதிர்த்தே கட்சித்தாவுவதாகக் கூறப்படுகிறது. நெருக்கடியிலிருக்கும் அரசாங்கத்தைக் காப்பாற்ற அல்லது சமூகத்தை பாதுகாக்க எடுக்கப்படும் முடிவுகள் சட்டம் சார்ந்ததாக இருந்ததா? இவ்வாறு எண்ணுமளவில்தான் நீதிமன்றத் தீர்ப்புக்கள் இருந்திருக்கின்றன.

சில சந்தர்ப்பங்கள், கட்சித்தாவிய பலரை இன்றும் பாதுகாக்காமலும் இல்லை. காரணம், இவர்கள் வைத்துள்ள தர்க்கம் சட்டத்துக்கு யதார்த்தமாகயிருக்கலாம். அல்லது, கட்சியின் தலைமைகள் நேர்த்தியான சட்டத் தர்க்கத்தை முன்வைக்காமலிருக்கலாம். உண்மையில், இவ்வாறு கட்சித்தாவுவது தலைமைகளின் தன்மானத்துக்கு விடுக்கும் நேரடிச்சவாலே. மறுபக்கம் மக்களின் ஆணையுடன் விளையாடும் செயலும் இதுதான். இதனால்தான், சமூக நலன் அல்லது தேச நலனை முதன்மைப்படுத்திய விவாதங்கள் முன்வைக்கப்படுவதுண்டு.

எது, என்னவோ முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் தன்மானம் பாதுகாக்கப்பட்டது. சட்டம் பாதுகாத்ததா? அல்லது தர்க்கம் பாதுகாத்ததா? ஏதோ, தலைமையின் ஆளுமை பாதுகாக்கப்பட்டது.

பொதுவாக தேசிய தலைமைகளை விடவும் சமூகத் தலைமைகள் அல்லது தனித்துவ தலைமைகளுக்குத்தான் இந்தத் தாவல்கள் அதிக தலையிடியைக் கொடுக்கிறது. பிரித்தாளும் தந்திரத்துக்குள்ளும் இந்தச் சட்டம் சிக்கித்தவிப்பதால்தான் இத்தலைமைகளுக்கு இத்தலையிடிகள். ஒரு வகையில் பேரம்பேசும் அரசியலில் தோல்வியடைந்த தேசிய கட்சிகள், இந்தச் சட்டத்தை சிக்கலுக்குள் திணித்ததா? இந்த சிந்தனைகளும் விரிந்தெழும்ப இக்காலக் களங்கள் வழிவகுக்கின்றன.

இவ்வாறானதொரு சவாலுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் உட்பட்டிருந்தமை ஞாபகம். அம்பாரை மாவட்ட முஸ்லிம் உள்ளூராட்சி சபைகளில் இரண்டில் கட்சி தோல்வியுற்றதால் வாக்குறுதியை நிறைவேற்றி, பதவி விலகினார் அஷ்ரஃப். இதையடுத்து விருப்பு வாக்கில் அடுத்திருந்த முன்னாள் ஸ்தாபகத் தவிசாளர் பாராளுமன்றம் செல்ல சட்டம் இடம்கொடுத்தது. ஆனாலும், இதைத் தடுத்து நிறுத்தும் சட்ட ஆளுமை மற்றும் தர்க்கத்திறன் அஷ்ரபிடம் இருந்ததால், மூன்றாமிடத்திலிருந்த தொப்பி மொஹிதீனே எம்.பியானார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து ஷேகு இஸ்ஸடீன் விலக்கப்பட்டிருந்தமையை தர்க்கித்து நிரூபித்ததால், இச்சந்தர்ப்பம் ஷேகு இஸ்ஸதீனுக்கு மறுக்கப்பட்டது. இவ்வாறான ஒரு பாய்ச்சலுக்கு ஹிஸ்புல்லாவும் தருணம் பார்த்துக்கொண்டிருந்தார். ஆனால், அஷ்ரபின் ஆளுமை ஹிஸ்புல்லாவை கட்டிப்போட்டதா? அல்லது காலமாற்றம் கட்டி வைத்ததா?


ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சந்திரிக்கா அரசின் பங்காளியாகுமளவுக்கு பலம் பெற்றதை விரும்பாத எதிரணி முஸ்லிம் எம்.பிக்கள்தான், ஹிஸ்புல்லாவை வளைத்திழுக்க வலை வீசியதாக அன்று பரவலாக சிலாகிக்கப்பட்டது. இவர்களின் வியூகங்கைள இவ்விடத்தில் தவிடுபொடியாக்கியது சட்டமும் இல்லை, சட்டத்தின் தர்க்கமும் இல்லை, அஷ்ரஃபின் முன்னகர்த்தல் வியூகங்கள்தான். இவ்வாறானதொரு முன்னகர்த்தல் வியூகத்தில் இறங்கியிருக்கிறது இன்றைய தலைமை. நிச்சயமாக இது சட்ட முன்னகர்த்தல்தான்.

இந்த அரசாங்கத்துக்கு இன்றைய முஸ்லிம் காங்கிரஸை பிளந்தறுக்கும் தேவையே இல்லை. பேரம் பேசும் பலமிருந்தால்தானே பிளவுபடுத்தும் தேவையேற்படும். எனவே, சட்டம்தான் ஜெயித்திருக்கிறது. இதில், இன்னொன்று உள்ளது. தனிப்பட்ட பிரபலத்தால் வெற்றியீட்டும் நம்பிக்கையில் உள்ளோருக்கு கட்சி விலக்கல் ஒரு பொருட்டல்ல. ஆனால், அடுத்த தேர்தல் வரைக்கும் காத்திருப்பதுதான் பெரிய பொருட்டு.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பலத்தை குறைத்து மதிப்பிட முடியாது. இக்கட்சியிலிருந்து முதலாவதாக பாராளுமன்றம் சென்ற பிரபலம், மீண்டும் தமது தாய்க்கட்சியில் இணைந்ததால் கடும் கனதியில் இங்கு களம் உள்ளது. இந்நிலையில்தான், சட்டச்சிக்கலுக்கு உள்ளானவருக்கு அடுத்த சவாலைச் சந்திக்க நேரிட்டுள்ளது. அரசியலமைப்பின் இருபதாவது திருத்தத்தை ஆதரித்ததால் வந்த வினையை வியாக்கியானம் செய்து விளைவை எதிர்பார்க்கவுள்ளார் இவர். இதற்குள் கட்சித்தாவலுக்கு எதிரான சட்டம் உரிய இலக்கை எட்டியிருக்கிறதா? என்ற இழுபறியும் உள்ளது.

பல தேர்தல்களை எதிர்கொள்ளவுள்ள அடுத்த ஆண்டில், பாராளுமன்றத் தேர்தலே முதல் நடைபெறலாம். எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காமல் போகலாம் என எதிர்பார்க்கப்படும் இத் தேர்தலுக்கும், கட்சித்தாவல்களே கை கொடுக்கவுள்ளது. எனவே, தலைமைகள் தைரியத்தை பரீட்சிக்கும் தேர்தலாகவும் இத்தேர்தல் அமையலாம்.

அத்துடன், சட்ட முன்னகர்த்தல்கள் மற்றும் தர்க்கங்கள், கட்சித்தாவியதற்கான வியாக்கினங்களை பலப்படுத்தும் வியூகங்கள் களைகட்டும் தேர்தலாகவும் எதிர்வரும் பொதுத் தேர்தல் அமையப் போகிறது.





நீர் கொழும்பு போருத்தோட்ட ஹிமா பெண்கள் நலன்புரி அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆலோசனை வழிக்காட்டல் நிகழ்வு கடந்த 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை போருத்தோட்ட அம்ரா திருமண மண்டபத்தில் ஹிமா அமைப்பின் தலைவி நஸ்மிய நஸ்மின் தலைமையில் இடம்பெற்றது.

ஒருகிணைப்பாளர் அஹமட் முனவ்வரின் ஆலோசணையின் பேரில் சிங்கப்பூரின் புதிய நிலா ஆசிரியரும் உதவுங்கரங்கள் நிறுவனத் தலைவரும், சமூக நீதி செயற்பாட்டாளருமான முஹமட் ஜஹாங்கிர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பெண்களுக்கான உளவள சம்பந்தமாகவும் சமய, மருத்துவ முறைமைகளில் எவ்வாறு செயற்படுவது் மனதை எவ்வாறு ஒருநிலைப்படுத்தி தத்தமது வேகைளை செய்வது மற்றவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்வது, உடல் ஆரோக்கியத்தை எவ்வாறு பேணுதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக சிறப்பான உரை ஒன்றை வழங்கினர்.

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின்

## 50 ஆண்டு நிறைவு விழா

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் 50 ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு 07 விளையாட்டு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

சம்மேளனத்தின் தலைவர் லுக்மான் சஹாப்தீன் தலைமையில் நடைபெறும் இம்மாநாட்டில், பிரதமர் தினேஷ் குணவர்தன பிரதம அதிதியாகவும் கௌரவ அதிதியாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் விசேட அதிதியாக இந்திய லோக்சபா பாராளுமன்ற உறுப்பினரும் இந்திய முஸ்லிம் லீக்கின் தலைவர்களில் ஒருவரான நவாஸ்கனியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இரு அரங்குகளாக நடைபெறும் இந்த மாநாட்டில் அடுத்த ஆண்டுக்கான முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் உத்தியோத்தர்களும் தேரிவு செய்யப்படுவார்கள்.



எம்.என். முஹம்மத்

# பெரும் சவாலை எதிர் கொள்ளும் இஸ்ரேல்

இஸ்ரேல் – பலஸ்தீன் யுத்தம் புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளது. காஸாவில் போராடும் போராளிகள் இஸ்ரேலுடன் மட்டும் போராடவில்லை. அமெரிக்கத் தலைமையிலான முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்தியை அநீதத்தின் மீது உருவாக்கப்பட்டுள்ள உலக ஒழுங்குடன் போராடுகின்றனர். 2014 காஸா யுத்தத்தில் 1500 அமெரிக்க இராணுவ அதிகாரிகள் நேரடியாக இஸ்ரேலுடன் இணைந்து போராடினர். இஸ்ரேலின் அழிவு என்பது புது உலக ஒழுங்கின் (New World order) அழிவாகும். எனவே, இலகுவாக மாற்றங்கள் ஏற்படும் என்பது சாத்தியமற்ற விடயமாகும். இஸ்ரேலினால் முடியாத கட்டம் வரும் போது நிச்சயம் அமெரிக்காவும், சில ஐரோப்பிய நாடுகளும் நேரடியாகக் களத்தில் இறங்கி, இஸ்ரேலைப் பாதுகாக்க முயற்சிக்கும். ஏனெனில், இஸ்ரேலின் அழிவு என்பது அமெரிக்காவின் அழிவாகும். அவ்வாறு ஒன்று நடக்கும் எனின் அதற்கான விலை மிக, மிக பெரியதாகக் காணப்படும்.

என்றுமில்லதாவாறு இஸ்ரேலின் சகல நகரங்களும் பாரிய தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. சுருக்கமாகச் சொன்னால் மொத்த இஸ்ரேலிய மக்களும் உயிரைக் கையில் பிடித்து பங்கர்களில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். பல இடங்களில் தப்பி ஓடுகின்றனர்.

ஹமாஸ் எப்படி இத்தனை நவீன ஆயுதங்களைப் பெற்றனர், அவர்கள் எப்படி 250KM தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளைத் தயாரித்தனர். இதுவே இன்று பலரும் கேட்கும் முக்கிய வினா? அவர்கள் எப்படி உயர் தொழில்நுட்பத்தையெல்லாம் ஒரு நொடியில் செயழிக்கச் செய்தனர்.

இதற்கான விடையை மிகவும் இலகுவாகக் கூறலாம். அதாவது இஸ்ரேல் என்பது நவீன தொழில் நுட்ப பொருளாதார அரசு. 6G தொழில் நுட்பம் ஆக இருக்கட்டும், Digital currency, Bit coin, Augmented virtual Reality ..... செய்மதி தொழில் நுட்பம் ... இப்படி நீண்டு செல்லும் இஸ்ரேலின் வல்லமை.

ஹமாஸ் இஸ்ரேலின் இந்தப் பலத்தை சரியாக மதிப்பீடு செய்தது.

இஸ்ரேலை வீழ்த்த வேண்டும் எனின், மூன்று காரணிகள் மிக முக்கியமானது என்பதை ஹமாஸ் கணித்து திட்டமிட்டது.

01. இஸ்ரேலை விஞ்சிய தொழில் நுட்ப அறிவு வேண்டும் .

02. மிகப் பெரிய வல்லரசிகளின் ஆசிர்வாதத்துடன் உள்ள நாடு என்பதால் எவ்வளவு இழப்புகள் வந்தாலும் தாக்குப் பிடிக்கும் ஆன்மீக பலம் உள்ள மக்கள் வேண்டும் .

03. இஸ்ரேலை விஞ்சிய பொருளாதார பலம் வேண்டும்.

ஹமாஸின் தாய் இயக்கமாகக் கருதப்படும் எகிப்திய முஸ்லிம் சகோதரத்துவ இயக்கம் கடுமையாக ஒடுக்கப்பட்டுள்ள நிலையில், ஹமாஸ் எவ்வாறு சில இலக்குகளை அடைந்துள்ளது என்பதே ஆச்சரியமானது.

இன்று உலகில் குறைந்த நிலப்பரப்பில் கூடுலான பொறியியலாளர் ( Engineers) வாழும் பிரதேசம் காஸாவாகும். பலஸ்தீன் இளைஞர்களும் விஞ்ஞானக் கணிதத் துறையே 90% தேர்ந்தெடுப்பதாக அண்மைய ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது.

அடுத்தது உலகில் குறைந்த நிலப்பரப்பில் கூடுதலான ஹாபிஸ்கள் (புனித அல்–குர்ஆனை மனனம் செய்தவர்கள்) உள்ள பிரதேசம் காஸாவாகும். பலமான ஆன்மீகக்கட்டுமானம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இதனாலேயே கைது செய்யப்படும் போது சிரிக்கின்றனர். மொத்த வீடும் குண்டு வீசி அழிவிற்கு உள்ளாகும் போது அதன் முன் இருந்து சிரித்த வண்ணம் புகைப்படம் எடுக்கின்றனர். இவர்களோடு போராடுவது இலகுவானதல்ல .

ஹமாஸின் பொருளாதார முதலீடுகள் பற்றிய தகவல்கள் எங்கும் இல்லை. ஆனால் இவ்வளவு பெரிய ஆயுதங்களைத் தயார் செய்வதற்கும் போராடுவதற்கும் மிகப் பெரிய நிதி வளம் வேண்டும். அது எப்படி என்பதை அவர்கள் மறைத்தே வைத்துள்ளனர். ஆனால், துருக்கி, ஈரான், கட்டார், மலேசியா போன்ற அரசுகளுடன் ஹமாசிற்கு மிகவும் நெருக்கமான உறவு உள்ளது. அதன் தலைவர்களில் பலர் மேற்சொன்ன நாடுகளில் வாழ்கின்றனர்.

இஸ்ரேல் சில வருடங்களிற்கு முன்பு டியுனேசியாவில் ஹமாஸின் UAV தயாரிப்பு பொறியியலாளர் மஹ்மூத் சுஹ்ரியை தனது உளவுப் பிரிவு மூலம் சுட்டுக் கொன்றனர். அத்துடன் துருக்கி, கட்டார், மலேசியா .... உலகில்.

எங்கிருந்தாலும் ஹமாஸிற்கு நேரடி உதவி செய்வோர் இலக்கு வைக்கப்படும் என இஸ்ரேல் அறிவித்துள் ளமையும், இஸ்ரேலில் நடக்கும் உள்நாட்டுக் கலவரமும் இந்தப் போர் எவ்வளவு ஆபத்தான கட்டத்தை நோக்கி நகர்கிறது என்பதைக் காட்டுகிறது.

இஸ்ரேல் சமனிலை இழந்துள்ளது என்பது தெளிவானது, இதனாலேயே கட்டிடங்களை அழிப்பதில் கூடுதல் கவனம் எடுக்கிறது.

ஒரு விடயம் தெளிவானது, இஸ்ரேல் அவசரமாக யுத்த நிறுத்தம் ஒன்றை நாடும். ஆனால், இந்தப் பிரச்சினை தீர்வதற்கு பல மில்லியன் உயிர்கள் பழியாவது நிச்சயம்.

மூன்றாம் உலக மகா யுத்தம் ஒன்று ஏற்படுவதற்கான நிபந்தனைகள் படிப்படியாக விருத்தி அடைவது மிகவும் கவலை அளிக்கிறது.

பலஸ்தீன பிரச்சினையை விளங்குவதற்கு இதன் போராட்ட வரலாற்றை தெரிந்து வைத்திருப்பது முக்கியமானது.

1948 ஆம் ஆண்டு இஸ்ரேல் என்ற நாடு அமெரிக்க – பிரித்தானிய கூட்டமைப்பின் மூலம் உருவாக்கப்பட்ட பலஸ்தீன் மக்களின் குருதியில் எழுந்ததாகும். ஆரம்பத்தில் இஸ்ரேலை எதிர்க்கும் சக்தி பலஸ்தீனியர்களிடம் இருக்கவில்லை. அதற்குப் பிரதானமாக இரண்டு காரணங்களைக் குறிப்பிடலாம்.

01.பொதுவாக அறபு – இஸ்லாமிய நாடுகளில் காணப்பட்ட அறிவியல் ஆன்மீக வீழ்ச்சி

02. எல்லா அறபு நாடுகள் மொத்த பலத்துடன் இஸ்ரேலைத் தாக்கியும் அடைந்த தோல்வியால் ஏற்பட்ட தோல்வி மனப்பாங்கு.

இஸ்ரேல் முஸ்லிம் நாடுகளாக இருக்கட்டும் அல்லது முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் நாடுகளாக இருக்கட்டும் அவர்களை பிரச்சினைகளில் மூழ்கடித்து பலஸ்தீனை மறக்கச் செய்வதில் வெற்றி கண்டது எனலாம். இதற்காக இஸ்ரேலின் உளவுப் பிரிவு பல நாடுகளில் குழப்பங்களை உண்டு பண்ணி முஸ்லிம்களிடையே பல பிரச்சினைகளை உருவாக்கியது.

அமெரிக்கா ஏன் இலங்கை போன்ற நாடுகளில் உள்ள முஸ்லிம் சிறுபான்மை நாடுகளில் முஸ்லிம்கள்







செல்வாக்குள்ள சமூகமாக மாறிவிடக் கூடாது என்பதற்காக பல தாக்குதல்களை இன்னும் பல நுணுக்கமான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது எனலாம். இது தொடர்பாக எழுதுவது என்பது ஆயிரம் பக்கங்களை வேண்டி நிற்பதாக அமைய முடியும் .

இவ்வளவு நெருக்கடிக்கு மத்தியிலும் பலஸ்தீன் போராட்டம் எவ்வாறு தோற்றம் பெற்றது என்பதை ஓரளவு நோக்குவோம் .

01. PFLP (The Popular front for Liberation of Palestine)

இது கம்யூனிச சித்தாந்த அடிப்படையில் ஜோர்ஜ் ஹபாஷ் (George Habash) எனும் பலஸ்தீன கிறிஸ்தவரால் 1967 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது . PFLP போராட்டத்தின் அடிப்படை இஸ்ரேல் என்ற நாட்டை அங்கீகரிக்காமையும், அமெரிக்க, ஐரோப்பிய தரப்பை முற்றாக புறக்கணிப்பு செய்வதும் ஆகும். இதன் விளைவாக அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள்ீகுடீ ஐ ஒரு பயங்கரவாத அமைப்பாக பிரகடனம் செய்தது.

02. பத்தாஹ்

இந்த அமைப்பு 1959 ஆண்டு குவைத்தில் யாஸிர் அறபாத் மற்றும் அவரது நண்பர்களால் உருவாக்கப்பட்டது. ஆனால், அவரது நண்பர்களான கஹ்லப் (Khalaf ) மற்றும் வஸிர் (wazeer) ஆகிய இருவரும் டியுனேசியாவில் இஸ்ரேலிய உளவுப் பிரிவால் கொலை செய்யப்பட்டதுடன், அடுத்த முக்கிய நண்பரான யஸ்ஹூர்தி (Yashurti ) லெபனானில் மர்மமான முறையில் உயிரிழந்தார். உண்மையில் யாஸிர் அரபாத் அற்புதமான தலைவர். தமது சகாக்களை இழந்த நிலையில் பலஸ்தீன பிரச்சினையை சர்வதேச மயப்படுத்துவதில் வெற்றி கண்டார்.

அவரது பதாவின் (PLO ) ஆயுதப் போராட்டத்தை விட அரசியல் போராட்டம் வலிமையானது. 1993 ஆம் ஆண்டு ஒஸ்லோ உடன்பாடு வரை அவர் ஒரு பாரிய முயற்சியைச் செய்தார். அவரும் 2004 ஆண்டு இஸ்ரேலிய உளவு அமைப்பினால நஞ்சூட்டிக் கொலை செய்யப்பட்டதாக நம்பப்படுகிறது .



03. இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பு

இது 1981 ஆம் ஆண்டு பத்ஹி சவ்க்கியினால் (Fathi Shaqqi) காஸாவில் உருவாக்கப்பட்டது. ஈரானிய அரசின் ஆதரவு இந்தக் குழுவிற்கு இருந்தது.

இவர்களுக்கும், PFLP இற்கும் கொள்கை ரீதியான முரண்பாடுகள் இருந்தாலும் பல இராணுவ, அரசியல் போராட்ட முனைகளில் சேர்ந்து தொழிற்பட்டது. இன்றும் காஸாவில் பலமான ஒரு குழுவாகவும் உள்ளது. 1987 ஆம் ஆண்டு முதலாவது இன்திபாதாவுடன் ஆரம்பமானது. இதன் தோற்றமே இஸ்ரேலிற்கு பெரும் தலையிடியாக இருந்தது. உண்மையில் ஹமாஸ் என்பது முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் பலஸ்தீனக் கிளையாக நம்பப்படுகிறது. இது செய்க் அஹமத் யாஸிஸ், அப்துல் அஸிஸ் ரன்திஸி, மஹ்மூத் ஸஹ்ரா முஹம்மத் தாஹா போன்ற தலைவர்களால் உருவாக்கப்பட்டது.

ஹமாஸின் அநேக தலைவர்கள் இஸ்ரேலிய ஏவுகணைகள் மூலம் கொலை செய்யப்பட்டாலும், ஒன்றன் பின் ஒன்றாக வலுவான தலைவர்கள் உருவாகினர். இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் கூறுவது இதற்கு பிரதான காரணமாக இருக்க முடியும். அவரது கருத்துப்படி ஹமாஸ் என்பது ஒரு சிந்தனை. அதனைப் பலவீனப்படுத்தலாம். ஆனால், அழிக்க முடியாது.

2006 ஆம் ஆண்டு தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து ஹமாஸ் காஸாவை 2007இல் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. அப்போது அது ஒரு தற்செயல் நிகழ்வாக பார்க்கப்பட்டாலும், இப்போது தான் அது ஒரு மூல உபாயம் (Strategic Plan) என்று புரிகிறது. இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சரின் நாம் மனித மிருகங்களுடன் மோதுகிறோம் என்ற கருத்து, ஹமாஸிற்கு மொத்த இஸ்ரேலும் பயந்துள்ளமையைத் தெளிவுபடுத்துகிறது.

2006, 2008, 2009, 2014 ஆகிய ஆண்டுகளில் பலமுறை ஹமாஸ் மீது இஸ்ரேல் கடுமையான தாக்குதல் நடத்தினாலும் ஒவ்வொரு முறையும் அது முன்பை விட பெரிய பலத்துடன் வெளிப்படுகிறது.

தற்போதைய போராட்டம் இந்த எல்லா அமைப்புகளும் ஒன்றிணைந்து நடத்துவது போல தெரிவது மட்டுமன்றி, புவியியல் ரீதியாக ஜோர்தானிலும், சினாய் பாலை நிலப்பகுதி, போலான் குன்றுகள் போன்ற இடங்களில் போராட்ட முனை தோன்றும் போல உள்ளது. ஏற்கனவே தென் லெபனானில் ஹிஸ்புல்லா உட்பட சகல தரப்பும் இஸ்ரேலை தாக்க ஆரம்பித்துள்ளன.

துருக்கிய ஜனாதிபதி எர்துகான் அமெரிக்க விமானம் தாங்கிய கப்பல்கள் பல வந்துள்ளமையை கடுமையாக விமர்சித்து, எல்லா பயங்கரவாதத்தையும் அமெரிக்காவில் உற்பத்தி செய்கிறது எனக் குற்றம் சாட்டியுள்ளமை பிரச்சினையில் துருக்கி என்ன வகிபாகம் எடுக்கவுள்ளது என்பதை தெளிவுபடுத்துகிறது.



# பொம்புள -01

“பொம்புள” பத்தியில் முஸ்லிம் சமூகத்து பெண்களின் பிரச்சனைகள் குறித்து அலசவுள்ளேன்.



- ஷாமிலா செரீப் -



பெண்கள் கர்ப்பமாக இருக்கும் காலகட்டம் அவர்கள் வாழ்வின் பொற்காலம் எனலாம், என்றைக்கும் இல்லாத எதிர்பார்ப்புக்களும் தேவைகளும் இக்காலத்தில் தான் உதிக்கின்றன, யாரின் ஆதரவு இல்லாவிட்டாலும் பரவாயில்லை கணவன் இருக்கார் அவர் பார்த்துக்கொள்வார் என்று நினைக்கும் பெண்கள் தான் அதிகம் பல பெண்களுக்கு கர்ப்ப காலம் வசந்தகாலமாகவும் இன்னும் பல பெண்களுக்கு கோடை காலமாகவும் அமைந்து விடுவது அவரவர் கணவரின் கையிலே தங்கியுள்ளது.

மேலைத்தேய நாடுகளில் உள்ளது போன்று பிரசவத்தின் போது பிரசவ அறைக்குள் கணவனை அனுமதிக்கின்ற நிலை இலங்கை அரசாங்க வைத்திய சாலைகளில் இல்லை,ஆனால் தனியார் வைத்தியசாலைகளில் சிசேரியன் செய்வதனை பார்ப்பதற்கு அனுமதி வழங்கப்படுகிறது, இன்னும் சில வைத்தியசாலைகளில் கணவனின் வேண்டுகோளுக்கு இனங்க குழந்தை பிரசவிப்பதனை பார்ப்பதற்கு அனுமதி வழங்குகின்ற அதே வேளை அதற்கான தனியாக கட்டணம் அறவிடும் முறை உள்ளது.

அவர்கள் அனுபவித்த இன்பம் அவள் மனைவி பிரசவத்தின் போது படும் வலியையும் வேதனையையும் கண்ணாறக்காண்கின்ற போதே மனைவி என்ற சொல்லுக்கு உண்மையான அர்த்தம் புரியும். கொழும்பிலுள்ள பிரபலமான அரச மருத்துவமனைகளில் தங்கள் மனைவியை பிரசவத்திற்காக சேர்க்கின்ற ஆண்கள் குறிப்பாக தமிழ் மொழி பேசுகின்றவர்கள் அந்த வைத்தியசாலை தொடர்பான தகவல்களையும் தங்கள் மனைவியின் நிலைப்பாட்டினையும் நன்கு கேட்டறிய வேண்டும்.

நமது சமூகத்திலுள்ள ஆண்கள் ”மாசா அல்லாஹ் எனக்கு அழகான Boy கெடைச்சிருக்கு அல்ஹம்துலில்லாஹ் சாலிஹான மகள் கெடைச்சிருக்கு என்று சொல்லுமளவு அதன் பின்னால் உள்ள வேதனைகளையும் வலிகளையும் அறிந்தும் அறியாதவர்களாக சுபஹானல்லாஹ் என்ற வண்ணம் காலத்தையோட்டி மீண்டும் ஓரிரு வருடங்களில் அதே வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்து அல்லாஹ் அக்பர் என்று கூறுகின்றனர்,

இங்கு முக்கியமான விடயம் என்னவெனில் எந்த பல்கலைக்கழகங்களில் மருத்துபீடம் இருக்கிறதோ அந்த பல்கலைக்கழகம் அமைந்துள்ள சுற்று வட்டாரத்தில் உள்ள போதனா வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் தமது கட்டுறுப்பயில்வினை தொடர்வதும் கற்கும் காலங்களில் செய்முறை பயிற்சியை தொடர்வதுமாகும். இந்த விடயத்தில் தான் நமது ஆண்கள் மிகுந்த கவனமெடுக்க வேண்டும், ஏனைய மாவட்டங்களில் உள்ள அரசாங்க வைத்தியசாலை போன்றல்ல நான் இங்கு குறிப்பிட்டிருக்கும் மகப்பேற்று மருத்துவமனைகள். மனிதாபிமானம் கேள்விக்குறியாகி விட்டது.அமைச்சுக்காரியாலயம் ஒன்றில் கடமை புரியும் எனது நெருங்கிய நண்பி ஒருத்தி அண்மையில் மகப்பேற்று மருத்துவ மனையில் தன் குழந்தையினை 12 மணித்தியால போராட்டத்தின் பின் பிரசவித்திருந்தாள், அவள் பிரசவ அறை தொடர்பாகவும் அங்கு தாதிகள் நடந்து கொள்ளும் விதம் தொடர்பாகவும் குறிப்பிட்ட தகவல்கள் அதிர்ச்சிகரமானவை. பிரசவ வலியால் கர்ப்பிணிகள் துடித்துக்கொண்டிருக்கும் போது கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடினார்கள் என இன்னொரு நண்பி தெரிவித்த தகவல்கள் மேலும் அதிர்ச்சிகரமானவை.

மேற்படி மருத்துவமனைகளில் இன ரீதியான துவேசம் காலகாலமாக இருந்து கொண்டே தான் இருக்கிறது,என்னிடம் இதுவரை கருத்து தெரிவித்தவர்களின் அனுபவங்களை பகிர்வதை விட மருத்துவமனையில் நான் எதிர்கொண்ட சவாலை குறிப்பிடுவதே மிகச்சிறந்தது, 2012 ஆண்டு எனக்கு மிகுந்த வலி ஏற்பட்டு 3 மாத கர்ப்பம் கருச்சிதைவுக்குள்ளானது, அதுவும் நள்ளிரவு வேளை என்பதனால் எதுவும் தெரியாது திண்டாடிய போது எனது பக்கத்து வீட்டில் வசிப்பவர் என்னுடன் தொழில் புரிபவர் என் நண்பி என்பதனை விட பாசமுள்ள சகோதரி எனலாம்,அத்தகைய சகோதரி எனை அழைத்துக்கொண்டு மருத்துவமனை சென்றார், கமே கிளினிக் கார்ட் இருக்கா என்ற கேள்விக்கு அவர் உங்கள் வைத்தியசாலையில் கடமை புரியும் பெண் மகப்பேற்று நிபுணர் செல்லும் தனியார் வைத்தியசாலையிற்கே கிளினிக் செல்கிறார் என்றதும் அங்கிருந்த ஊழியர்களின் முகம் சுருங்கி பின் விரிந்தது,பின் ”பெட் ஜகட் ” கொண்டு வந்ததா என்ற கேட்டதும் அந்த சகோதரி அவசரத்தில் எடுத்துவரல என்றதும் போயிட்டு பெட்ஜகட் எடுத்து வந்தால் மாத்திரம் தான் இந்த வார்ட்டில் அனுமதிப்போம் என்றாங்க, அந்த வார்த்தை எனக்கு புதிதாகவே இருந்தது முன் பின் அந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்படாததால் அங்குள்ளவர்களின் அதட்டலும் கேலி நிறைந்த பேச்சும் எனை சங்கடப்படுத்தியது, நாம் வேறு தனியார் மருத்துவமனைக்கு செல்லலாம் என்ற போது பொறுமையா இரு, நான் போயிட்டு உம்மாட சாரிய கிளித்து அனுப்புறன் அதைக் பாவாடை போல் கட்டிக்கொள், உன்னிடம் சேர்ட் இருக்கு தானே அதனையும் எடுத்தனுப்புறன் அது தான் இப்போதைக்கு ”பெட்ஜகட்” என்று கூறி இருக்க வைத்து விட்டு சென்றார், வேதனையாலும் வலியாலும் துடித்த என்னை யாரும் கண்டு கொள்ளவில்லை .

வார்ட்டில் அனுமதிக்கவுமில்லை முதலுதவியும் இல்லை நேரம் நள்ளிரவு ஒரு மணியைக்கடந்திருந்தது, அதிலிருந்து அரை மணித்தியாலயத்தில் எனக்கான அந்த ஆடை கிடைக்கப்பெற்றது, அந்த சோதரியின் உம்மாவினது சாரியை மூன்று துண்டுகளாக்கி அனுப்பியிருந்தார். அதனை எப்படி அணிவது என்றே தெரியல, அபாயா உடுத்து தலைக்கு சோல் சுத்தும் எனக்கே இத்தனை சங்கடமாக இருந்தால் முகம்மூடிக்கொண்டு இருக்கும் பெண்கள் இந்த வைத்திய சாலைக்கு எப்படி தான் வந்து போகிறார்களோ என நினைத்து எனக்கான கட்டிலில் அமர்ந்து கொண்டேன், அப்போது எனை ஒரு தாதி வருமாறு அழைத்தார், திரைச்சீலையால் மறைக்கப்பட்ட நான்கு பக்க அறை எனை படுக்க சொன்னார் அப்போது அழகிய இளம் பெண் மருத்துவர்கள் வந்தார்கள், ஒருவர் கையில் சாம்பாருக்கு பயன்படுத்தும் குண்டாளக்கரண்டி போன்று இருந்தது அதனை அன்டூ எனக்குறிப்பிட்டார் மற்றவர் கையில் சோடா மூடி உடைக்கும் கருவி போல் இன்னொரு கருவி இருந்தது,இதனை செலுத்தி கருசிதைந்திருக்கா இல்லையா என பார்க்கப்போவதாக குறிப்பிட்டார், நான் மறுத்து விட்டேன்,தொழிநுட்பம் விருத்தியடைந்த காலத்தில் இப்படியொரு கருவியா? முடியாது என்று கூறி அவர்கள் பரிசோதிக்க ஒத்துழைக்க வில்லை, Scan பண்ணுமாறு குறிப்பிட்டேன்,அப்படி முடியாது எனத்திட்டிவிட்டு எனக்கான பைலில் நான் உரையாடியவற்றை எழுதி பெரிய வைத்திருக்கு காலையில் காட்டும் படி அங்கிருந்த தாதிக்கு பணித்து விட்டுச் சென்றார், வலி தாங்க முடியாத நான்

தாதியிடம் கெஞ்சி மன்றாடி வலி மாத்திரை பெற்றுக்கொண்டேன். காலையில் Scan பண்ணுவதாக சொல்லி பகல் வரை இழுத்தடித்தார்கள், அவர்கள் அணியச் சொன்ன ஆடை அதிகாலையிலே கிடைத்து விட்டது, ஆனாலும் Scan பகலையும் தாண்டியிருந்தது, சரியாக இரண்டு மணிக்கு எனை அழைத்து இரவு நான் உரையாடியவற்றை வாசித்துக்காட்டி இப்படி பேசினீர்களா?என்று கேட்டார் அந்த பெரிய வைத்தியர் ”ஆம் டொக்டர் நான் அப்படி பேசினேன் ஒரு பெண் திருமணமாகி பலத்த பயத்திற்கு மத்தியிலே தாம்பத்திய உறவு ஆரம்பிக்கிறது,அதுவே மனஅழுத்தம்,தொழிநுட்பம் வளர்ச்சியடைந்த காலத்தில் இப்படி ஒரு கருவியை உபயோகிப்ப நினைப்பதனைக் கூட என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றேன்,வைத்தியரும் சிரித்து விட்டு எல்லோருக்கும் Scan பாவிப்பதென்றால் அரசாங்கத்திற்கு செலவாககுமே என்று கூறி scan செய்து விட்டு Completely miscarriage என அறிக்கை எழுதி அனுப்பிவிட்டார் அதன் பிறகு எனது இரண்டாவது குழந்தையும் கருச்சிதைக்குள்ளானது.

இங்கு நான் சொல்ல வரும் விடயம் என்னவெனில் மகப்பேற்று மருத்துவமனைகளில் கடமையாற்றும் பல ஊழியர்கள் இன ரீதியாக துவேசத்திற்குட்படுத்துகிறார்கள். சிங்களம் தெரிந்த பெண்கள் தப்பிக்கின்றனர் ஏனையோர் துன்பமனுபவிக்கின்றனர் பிள்ளை பிறந்த சந்தோஷ த்தில் பட்ட கஸ்ட்டங்களை மறந்து விடுவதாக பல நண்பிகள் குறிப்பிட்டுள்ளனர்.பலர் வெட்கத்தில் மறைத்து விடுகின்றனர்.

தொடர்வாள்...

---

நுண்,சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மையாளர்களுக்கு

# ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 100 மில்லியன் டொலர்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



எமது நாட்டில் தொழில் முனைவோர், நுண்,சிறு மற்றும் நடுத்தர தொழில்துறையினருக்கு மறக்க முடியாத ஓர் சந்தர்ப்பமாகும் என்றும்,எமது நாட்டின் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் உட்பட சகல அதிகாரிகளும் நுண்,சிறு மற்றும் நடுத்தர தொழில்துறையினரின் நலனுக்காக அதிக பக்கபலத்தை வழங்குகின்றனர் என்றும்,எமது நாட்டிலுள்ள நுண்,சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக ஆசிய அபிவிருத்தி வங்கி 100 மில்லியன் டொலர்களை எமது நாட்டிக்கு வழங்குவதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்நிதி National Credit Guarantee Institution ஊடாக நமது நாட்டின் வங்கி கட்டமைப்பில் 13 வங்கிகள் மூலம் மூலதனமாக வழங்கப்படுகிறது என்றும்,இதன் ஊடாக இலங்கையிலுள்ள நுண்,சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்துறையினருக்கான கடன் உத்தரவாதத் திட்டம் மற்றும் சலுகை வட்டி விகிதத்தில் கடன் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த இதன் ஊடாக முடிந்ததாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (13) காலை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் மற்றும் நுண்,சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.இச்சந்திப்பில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் இந்நிதித் தொகையை வழங்கவுள்ளதாக தெரிவித்தனர்.

குறைந்த அரசாங்க வருவாய் மற்றும் சரியான நிதி முகாமை இல்லாது ஒரு நாடு முன்னேற முடியாது என்றும்,ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அதிக வருமானம் ஈட்டப்பட வேண்டும் என்றாலும்,தற்போதைய அரசாங்கம் வரி அதிகரிப்பு மூலம் அரசாங்க வருவாயை அதிகரிக்க முயற்சித்தாலும், பொருளாதாரத்தை சுருக்குவதன் மூலம் அதைச் செய்ய முடியாது என்றும்,அரச வருவாயை அதிகரிக்க பொருளாதாரத்தை விரிவடையச் செய்ய வேண்டும் என்றும்,நுண்,சிறு மற்றும் நடுத்தர தொழில்துறையினர் கிட்டத்தட்ட 50 சதவீத பங்களிப்பை இதற்கு வழங்குகிறார்கள் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.

இந்த வகையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவர்களது நேரடி ஒருங்கிணைப்பின் கீழ் பல கட்டங்களாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைப் பிரதிநிதிகளை நுண்,சிறு மற்றும் நடுத்தர தொழில் துறையினர் மற்றும் வர்த்தகர்கள் நேருக்கு நேர் சந்தித்த கலந்துரையாடியதன் விளைவாக, இந்த 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தொகை நுண்,சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கு கிடைக்கப்பெற்றமை சிறப்பம்சமாகும்.

இத்தொகை டிசம்பர் மாதத்தில் நாட்டிற்கு கிடைக்கப் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசிய அபிவிருத்தி வங்கியை பிரதிநிதித்துவப்படுத்தி ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கை பணிப்பாளர் Takafumi Kadono அவர்களும்,Santosh Pokharel (Unit head, Private Sector Development) அவர்களும், நிதி ஆய்வாளர் திருமதி.Uresha T. Walpitagama ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

---



எச்.ஐ.வி.துரித பரிசோதனையை மேற் கொள்வதற்கான விஷேட பயிற்சியொன்று சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் அண்மையில் இடம் பெற்றது. தெரிவு செய்யப்பட்ட தாதிய உத்தியோகத்தர்கள் சிலர் இதில் கலந்து கொண்டனர்

இந்நிகழ்வில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர், வைத்திய கலாநிதி அஸாத் எம்.ஹனீபாவும் கலந்து கொண்டார்.

(அஸ்ஹர் ஆதம்)

---

# முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் 50 மாநாடு தொடர்பான உயர் குழுக் கூட்டம்



(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் 50 மாநாட்டை நடாத்துவது தொடர்பான உயர் குழுவின் விஷேட கூட்டம் ஒன்று (10) இடம் பெற்றது.

இதன்போது அவர்களின் அழைப்பின் பேரில் சிங்கப்பூரின் புதிய நிலா ஆசிரியரும் உதவுங்கரங்கள் நிறுவனத் தலைவரும்இ சமூக நீதி செயற்பாட்டாளருமான முஹமட் ஜஹாங்கிர் கலந்து கொண்டு அமைப்பின் செயற்பாடுகளை பாராட்டி அவர்களுக்கு இந்த நாட்டில் சகல இன மக்களுடனும் ஒன்றினைந்து செல்லும்போது நல்ல பலன்களை அடைந்து கொள்வதுடன் நம்பிக்கையையும் கட்டியமுப்பலாம் என்ற பல அவசியமான கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.

சம்மேளனத்தின் தலைவர் லுக்மான் ஸஹாப்தீன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் சம்மேளனத்தின் செயலாளர் அஙமட் முனவ்வர், சம்மேனத்தின் முன்னாள் தலைவர்களான என்.எம். அமீன், சட்டத்தரணி ரஷீட் எம் இம்தியாஸ் உள்ளிட்ட உயர் பீட உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தன

இதன்போது சம்மேளனத்தின் மாதந்த சஞ:சிகையும் ஜஹாங்கிருக்கு கையளிக்கப்பட்டன.

## மனநலமும் ஆலோசனையும்

அவசரம் என்பது ஒரு விடயத்தை விரைவாகவும், வேகமாகவும், சில சமயங்களில் கவனக்குறைவாகவும் செய்வதை குறிக்கும்.

அவசரம் என்பது ஒரு விசுவாசியின் குணம் அல்ல'.

சிந்தித்து நிதானமாகவும் அழகாகவும் ஒன்றை செய்வது தான் ஒரு உறுதியான விசுவாசியின் குணமாக இருக்க வேண்டும்.

அமைதி என்பது அல்லாஹ்விடமிருந்தும், அவசரம் ஷைத்தானிடமிருந்தும் வருகிறது என்று நாம் படித்து இருக்கிறோம்.

அவசரம் ஷைத்தானிடம் இருந்து வருகிறது என்றால்.....

அது மிகப் பெரிய தோல்விக்கு வழிவகுக்கும்.

மன வருத்தத்தைத் தரும்.

முன்செல்வதற்கும் முன்னேற்றத்திற்கும் தடையாக இருக்கும்.

வேலையை

உணர வைக்கும்.

- மற்றவர்களுக்கும் மற்ற விடயங்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.
- அவசரம் காரணமாக, ஒரு நபர் தனது சொந்த உரிமைகளை கூட இழக்க நேரிடும்.
- சில நேரங்களில், அவசரம் காரணமாக, கடுமையான மன உளைச்சலுக்கு உள்ளாக நேரிடும்.
- மிக நல்ல உறவுகளைக் கூட இழக்க வேண்டி வரும்.

மக்கள் அவசர முடிவுகளை எடுக்கும்போது, அவர்கள் அதிக தவறுகளை செய்வார்கள் அல்லது அறியாத தவறுகளை செய்வார்கள்.

குரங்குகளை வைத்து மேற்கொண்ட ஒரு புதிய ஆய்வு இப்படி விளக்குகிறது:

மூளை செல்கள் புதிய தகவல்களுக்கும், மோசமான தகவல்களுக்கும் அதிக உணர்திறன்

இருக்க முனைகிறோம்" என்று வாண்டர்பில்ட் பல்கலைக்கழகத்தின் நரம்பியல் விஞ்ஞானி ரிச்சர்ட் ஹெய்ட்ஸ் கூறுகிறார். "நாங்கள் விரைவான முடிவுகளை எடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு தல்லப்படும்போது எங்கள் மூளை விடயங்களை வித்தியாசமாகப் பார்க்கிறது." என்று கூறுகிறார்.

சுருக்கமாகச் சொன்னால், அவசரம் பல பிரச்சனைகளுக்குக் காரணமாகிறது.

நாம் எதைச் செய்தாலும் அவசரப்படாமல் நிதானமாகச் செய்ய வேண்டும்.

திருமணம், படிப்பு, வேலை, வியாபாரம், வழிபாடு, குழுப்பணிகள் என எதுவாக இருந்தாலும் அவசரப்படாமல் அமைதியாகவும் நிதானமாகவும் நடந்து கொள்ள

# அவசரம்



வேண்டும்.

பதறிய காரியம் சிதறிப் போகும் என்ற பழமொழியை பலதடவை நாம் படித்திருப்போம்.

பதட்டமாக இருக்கும் போது எதையும் சரியாக யோசிக்க நம் மூளை நமக்கு இடம் தருவதில்லை. நம் உணர்வுகளைச் ச.ரியாக

சரியான நேரத்தில் முடிக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் ஒரு விடயத்தை அவசரமாக சொல்லி விட வேண்டும் என்ற ஆசையிலும் பலர் அவசரப்பட்டு பல தவறுகளை செய்கிறார்கள்.

அவர்களின் அவசரப்புத்தி எதோ

கொண்டதாக மாறி, தவறான முடிவுகளை எடுக்க எமக்குள் விருப்பத்தை ஏற்படுத்துகிறது.

"நாம் விடயங்களை மிக விரைவாகச் செய்ய முயற்சிக்கும்போது, நாம் அதிக பிழைகளைச் செய்கிறோம், பின்னர் மெதுவாக அல்லது நிதானமாக செய்யும்போது நாம் மிகவும் துல்லியமாக

ஒரு சிக்கலை உருவாக்கும் என்று அவர்கள் அப்போது நினைக்க மாட்டார்கள். அவசரம் பல பாதிப்புகளை ஏற்படுத்தும் சக்தியை கொண்டது.

- அவசரம் ஒருவரை மற்றவர்கள் முன் சங்கடமாக

வெளிப்படுத்தவும் வாய்ப்பு தருவதில்லை. தவறான, பிழையான முடிவுகளை எடுக்க அவசரம் தூ ண்டுதலாக இருக்கிறது என்பதால் நிதானமாகவும் அமைதியாகவும் செயற்பாட நாம் எம்மை பழக்க வேண்டும்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

## "2030 இல் யாவருக்கும் உறையுள்" 10 ஆவது வீடு கையளிப்பு!



(கியாஸ் ஏ. புஹாரி)

"2030 இல் யாவருக்கும் உறையுள்" எனும் தொனிப்பொருளில் சம்மாந்துறையில் தொடராக மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டத்தின் 10வது வீடு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

சமூக சேவையாளர், விஞ்ஞான முதுமாணி அஸ்மி யாசீனின் முயற்சியின் பலனாக கட்டப்பட்ட 10வது வீடு இதுவாகும். "யாவருக்கும் உறையுள்" திட்டத்தின் 10வது வீடானது அஸ்மி யாசீன் உட்பட பிரமுகர்கள் பலரின் பங்குபற்றுதலோடு செந்நெல் கிராமம் - 02 பிரதேசத்திலுள்ள பயனாளிக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



சப்ரகமுவ பல்கலைக்கழக விரிவுரையாளர் லறீனா அப்துல் ஹக் மொழி பெயர்ப்புச்சிறுகதைத் தொகுதிக்காகதேசியவிருதுபெற்றுள்ளார். இதனை யொட்டி இவரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வொன்று அண்மையில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் இடம் பெற்றது. இதன் போது பல்கலைக்கழகத் உபவேந்தர் உதய ரத்னாயக்க இவருக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிப்பதைக் காணலாம். (அஸ்ஹர் ஆதம்)

## கல்முனை ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய முகாம்



(எம்மையெம் அஸ்ஹர்)

கல்முனை ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் சாய்ந்தமருது மற்றும் சம்மாந்துறை ஆகிய இடங்களில் இயங்கி வரும் கிளை வைத்தியசாலைகளின் ஒரு வருட பூர்த்தியினை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மருத்துவ முகாம் அண்மையில் கல்முனை இலங்கை போக்குவரத்து சாலை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கை போக்குவரத்து சாலையிலும், பிராந்திய சாலையிலும் கடமையாற்றும் உத்தியோஸ்தர்களும் ஊழியர்களும் கலந்து கொண்ட இந்த வைத்திய முகாமில் குருதியில் சீனியின் அளவு, உடற்பருமன் சுற்றளவை கணித்தல், குருதி அழுத்தம், குருதியில் ஒட்சிசனின் அளவை அறிதல், கண் பரிசோதனை போன்றவற்றிற்கான சிகிச்சையும், உடற்பயிற்சி, உணவு பழக்கவழக்கம் சம்பந்தமான ஆலோசனை, நீரழிவு, பக்கவாதம், நாட்பட்ட நோய்கள் சம்பந்தமான ஆலோசனைகளும் அவற்றிற்கான தீர்வும் இந்த மருத்துவ முகாமின் போது வழங்கப்பட்டன.

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தமிழ்நாடு மாநில பொதுக் குழுவில் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் 5 வது முறையாக மீண்டும் தலைவராக தேர்வு

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவராக 5 முறையாக மீண்டும் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் தேர்வு செய்யப்பட்டார். தொடர்ந்து அகில இந்திய தலைவராக பொறுப்பு வகித்து வருகிறார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தமிழ்நாடு மாநில புதிய பொதுக்குழுக் கூட்டம் 2023 அக்டோபர் 04ஆம் நாள் புதன்கிழமை காலை 11.00 மணியளவில், சென்னை ராயபுரம் மேற்கு மாதா வீதியில் அமைந்துள்ள ரம்ஜான் மஹாலில், தலைவர் முனீருல் மில்லத் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் தலைமையில் நடைபெற்றது.

04.10.2023இல் இருந்து 31.12.2027 வரையிலான அடுத்த நான்கு ஆண்டுகளுக்குரிய மாநில நிர்வாகிகள் தேர்வு குறித்து தலைவர் எடுத்துரைத்து, முதலாவதாக தலைமைப் பதவிக்கு முன்மொழியக் கேட்டுக் கொண்டதன் பேரில், திருநெல்வேலி பேட்டை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எம். கோதர் முகைதீன், பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் அவர்கள் பெயரை முன்மொழிந்தார். அதனை ராமநாதபுரம் எம்.எஸ்.ஏ. ஷாஜகான் அவர்கள்



வழிமொழிய, பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்றனர்.

அதன் பின் மாநில பொதுச் செயலாளர், மாநில பொருளாளர், மாநில துணைத் தலைவர்கள், மாநில செயலாளர்கள், மாநில துணைச் செயலாளர்கள், நட்சத்திர பேச்சாளர்கள், தலைமை நிலைய பாடகர்கள், கவுரவ ஆலோசகர்கள் ஆகியோர் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

# இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்து அனைவரும் இலங்கையர்களாக வாழ வேண்டும்

## திலித் ஜயவீர அழைப்பு



(எம்.ஏ.எம்.நிலாம்)

இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்து அனைவரும் இலங்கையர்கள் என்ற நல்லிணக்கத்துடன் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஒன்றுபடுமாறு லக்பிம ஜனதா கட்சியின் அங்குரார்ப்பண வைபவத்தில் அதன் தலைவர் திலித் ஜயவீர நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

குறுகிய எண்ணங்களை மறந்து எல்லோரும் ஒன்றுபடுவதன் மூலமே தேசத்தைப் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்ப முடியும் எனவும் மதம், மொழி கடந்த மக்களாக கைகோர்ப்பதனூடாக உலகின் சிறந்த நாடாக எமது நாட்டை மலரச் செய்வதற்கு எல்லோரும் பாடுபட வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த புதன்கிழமை லக்பிம ஜனதா கட்சியின் தலைமைச் செயலகத்தை ஆரம்பித்து வைத்துப் பேசும் போது திலித் ஜயவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர் வரக்கூடிய ஜனாதிபதித் தேர்தலிலோ, வேறு தேர்தல்களிலோ இலக்கு வைத்து அவசரப்பட்டு எந்த முடிவையும் நாம் எடுக்கத் துணியவில்லை. புதிய அரசியல் கலாசாரத்தைத் தோற்றுவித்து சகல இனத்தவர்களையும் ஒரே குடையின் கீழ் இணைப்பதே தனது இலட்சியமெனவும் நாம் அனைவரும் இலங்கையர்கள் என்ற கோட்பாட்டை முன்னெடுத்து முன்னேற்றப் பாதையில் பயணிக்க வேண்டும் என்பதே தனது இலட்சியமெனவும் அவர் குறிப்பிட்டார்.

எனக்குள்ளும் ஓர் அரசியல் இருக்கவே செய்கின்றது. எனது பள்ளிப் பருவம் முதல் அரசியல் பாடங்களைக் கற்றவன்.

இந்த எனது நீண்ட பயணத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம், கத்தோலிக்க சமூகங்களைச் சேர்ந்த நிறைய நண்பர்கள் என்னோடு இருக்கின்றார்கள். அவர்கள் எவரையும் நான் இன, மத கண்ணோட்டத்துடன் பார்க்கவில்லை. இலங்கையர்களாகவும் எனது சகோதரர்களாகுமே நோக்குகின்றேன்.

எமது நாட்டின் அரசியல் பயணம் ஆரோக்கியமானதாக இல்லை. எமது அரசியல் பாதையை சரியான தளத்துக்குக் கொண்டு வர வேண்டும். நாம் கடந்து வந்த பாதை குறுகிய அரசியல் நோக்கம் கொண்டதாகக் காணப்படுகின்றது. இதனை நாம் மாற்றியாக வேண்டும்.

நாம் தொடர்ந்து முரண்பாட்டு அரசியலில் பயணிக்க முடியாது. புரிந்துணர்வுடன் கூடிய நல்லெண்ணத்தைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பேதமின்றி எல்லோரும் சமமானவர்கள் இலங்கைத் தாயின் மக்கள் என்ற பரந்துபட்ட உணர்வுடன் இணைந்து செயற்பட வேண்டும். – என்றார்.

# சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு புத்தகங்கள் அன்பளிப்பு



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு அண்மையில் புத்தளம் வேப்பமடு அல் அரபா பாலர் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் புத்தகப்பைகளும் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது.

இவ் அன்பளிப்புக்கள் உளவியல் ஆலோசகர், ஊடீளு நிறுவனத்தின் ஸ்தாபகர், யுஅயணழபெ கல்லூரியின் பணிப்பாளர், பேராதனை பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர். இல்ஹாம் மரிக்கார் அவர்களினால் பாலர் பாடசாலையின் பொறுப்பாசிரியர் மஸ்கூறா ஆரிப் ஊடக வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் பெற்றோர்களுக்கு குழந்தை உளவியல் பற்றிய பயிற்சியும் நடாத்தப்பட்டது.

குழந்தைகள் அதிகமாக தண்டிக்கப்படுவதால் அவர்களுக்கு உள ரீதியான பல தாக்கங்கள் ஏற்படுவதாகவும் இதனால் அவர்கள் ஏனைய கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாகாக் கூடிய வாய்ப்புக்களும் அதிகமாக காணப்படுவதாகவும் வலியுறுத்தினார்.



# FACETS SRI LANKA கண்காட்சி ஜனவரியில்...





(எம்.எம்.ஜெஸ்மின்)

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை (NGJA) மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை (EDB) ஆகியவற்றுடன் இணைந்து, ஆசியாவின் முதன்மையான இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சியான FACETS Sri Lanka நிகழ்வை, எதிர்வரும் 2024 ஜனவரி 06 முதல் 08 வரை சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடாத்தவுள்ளதாக, இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கம் (SLGJA) அறிவித்துள்ளது.

2002 இல் உருவாக்கப்பட்ட SLGJA, இலங்கையில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் உயர் அமைப்பாகும் என்பதோடு, இது இத்துறையில் உள்ள அனைத்து துணைத் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

பல ஆண்டுகளாக சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரணத்துறை நாட்காட்டியில், FACETS Sri Lanka கண்காட்சி ஒரு முக்கிய நிகழ்வாக இடம்பிடித்துள்ளது.

அந்த வகையில் இந்த வருடமும், உலகளாவிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் சந்திப்பு மையமாக அது அமையவுள்ளதோடு, உலகம் முழுவதிலுமிருந்து மொத்த விற்பனையாளர்கள், ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர்கள், பட்டைதீட்டுவோர், சில்லறை விற்பனையாளர்கள், சேகரிப்பாளர்கள், முக்கியமான வர்த்தகர்களுக்கு இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களை ஈர்க்கும் வகையில் செயற்படும்.

இந்த கண்காட்சி குறித்த அறிமுக ஊடக மாநாடு கடந்த திங்களன்று சினமன் கிராண்ட் ஹோட்டலில் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

---

**காஸாவிலிருந்து....**

**முன்பக்கத் தொடர்ச்சி**

தெரிவித்துள்ளனர்.

எங்களுக்கு இரு வழிகள் உள்ளன, இந்த ஆக்கிரமிப்பை தோற்கடிப்பது அல்லது வீடுகளில் இறப்பது என ஹமாஸின் அரசியல் மற்றும் சர்வதேச உறவுகள் பணியகத்தின் தலைவர் ஆஸம் நயீம் தெரிவித்துள்ளார்.

நாம் வெளியேறப் போவதில்லை.1948 இல் இஸ்ரேல் உருவான போது பலஸ்தீனர்கள் பெருமளவில் இடம்பெயர்ந்து போன்று இடம்பெயரத் தயாரில்லை எனத் தெரிவித்தார். காஸா 17 வருடங்களாக தாங்கிய மூச்சுத் திணறலின் முற்றுகையின் விளைவுதான் சனிக்கிழமை முற்றுகையென்றும் நாம் அமைதியாக இருந்துகொண்டிருக்கின்றோம். இந்த திறந்தவெளிச் சிறையிலிருந்து வெளியேற முயற்சித்தோம். சர்வதேச சமூகத்தின் மட்டத்தில் குரல் எழுப்ப முயற்சித்தோம். நாங்கள் செய்வது தற்காப்புச் செயல், நாம் இருப்பை காக்குறோம் என்றும் தெரிவித்துள்ளார். இஸ்ரேலினால் கடல், தரை மார்க்கமாக தொடராக சிவிலியன்கள் மீது தாக்குதல்கள் தொடரும் நிலையில் பலஸ்தீன ஆயுதக் குழுக்கள் இஸ்ரேல் மீது பல்வேறு பகுதிகளிலிருந்தும் தொடர்ந்தும் தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர். நூற்றுக்கணக்கானவர்கள் இரு தரப்பிலும் இறந்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

யுத்தம் பற்றி கருத்துத் தெரிவித்த பிரித்தானியாவுக்கான பலஸ்தீனத் தூதுவர் உஸாம் சம்லத், "யூதர்கள் 48 மணி நேரத்தில் அனுபவித்த துன்பத்தினை நாம் பல தசாப்தங்களாக அனுபவித்து வருகிறோம். நூறு பேரை சிறை பிடித்தது தொடர்பாக பேசுகிறார்கள். ஆனால் கடந்த 16 ஆண்டுகளாக இஸ்ரேல் 20 இலட்சம் அப்பாவி பலஸ்தீனர்களை பணயக்கைதிகளாக பிடித்து வைத்துள்ளனர். ஹமாஸ் போன்ற குழுக்கள் உருவாகுவதற்கும் மேற்குலகின் ஒரு பக்க செயற்பாடே காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம் காஸா பிரதேசத்தில் மக்களின் அடிப்படை வசதிகளை இல்லாமல் செய்வதற்கு இஸ்ரேவலர்கள் பெரும் பிரயத்தனங்களைச் செய்து வருகின்றார்கள். நீர் ஊற்றுக்களை சீமெந்து கற்களை போட்டு அடைத்து வருகின்றனர். இப்போது அங்கு மக்கள் தண்ணீரோ, மின்சாரமோ இல்லாது வாழ்ந்து வருகிறார்கள்.

அதேநேரம், கட்டார் மன்னர் காஸா மீது மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்களை நிறுத்தாவிடின் தமது நாடு உலக நாடுகளுக்கு கேஸ் விநியோகத்தை நிறுத்துமென எச்சரித்துள்ளது.

**நல்லிணக்க....**

**முன்பக்கத் தொடர்ச்சி**

முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா தெரிவித்தார்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினை அடுத்து பதவியை இழந்த நசீர் அஹமதுக்குப் பதிலாக மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட அலிசாஹிர் மௌலானா, உதயத்திற்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் இடம்பெற்றது போன்று மோதல் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதான சமூகங்களாக இருக்கும் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நல்லிணக்கத்தை கட்டி எழுப்பி இரு சமூகங்களும் இணைந்து தம் பணிகளை முன்னெடுப்பதே தனது பிரதான இலக்கு என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சத்திய பிரமாணம் எடுத்து பதவி ஏற்கவுள்ள அலிசாஹிர் மௌலானா, மட்டக்களப்பு மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினராக ஐந்தாவது முறையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எனக்கு முன்னிருந்த பாராளுமன்ற உறுப்பினர் மோதல் அரசியலை முன்னெடுத்தார். இதனால் சமூகங்களுக்கிடையே முரண்பாடுகள் தோன்றின.

என்னை பொறுத்தவரையில் இணக்கப்பாட்டு அரசியலையே நான் முன்னெடுக்க உள்ளேன். அதன் மூலமே எங்களுக்கு இந்த மாவட்டத்தில் எங்கள் பிரச்சனைகளை தீர்த்து ஒற்றுமையாக வாழக்கூடிய சூழல் உருவாகும் என்றும் அலிசாஹிர் மௌலானா மேலும் தெரிவித்தார்.


**மாற்று முறை மருத்துவத்தின் மூலம் சகல விதமான வலிகளுக்கும் நிவாரணம்!**

மாற்று முறை மருத்துவத்தில் 35 வருடங்களுக்கும் மேலான அனுபவம்...

உங்கள் நோய்க்கு ஏற்ற மாற்று மருத்துவ முறையை இனங்கண்டு, அதற்கேற்ப சிகிச்சை...

பக்க விளைவுகள் அற்ற, முற்றிலும் இயற்கை முறையிலான சிகிச்சை

மாற்று முறை வைத்திய நிபுணர் எச். எம். ரபீக்

தொடர்புகளுக்கு: 0779544505

"ஆரோக்கியமே செல்வம்"


**பயப்படாதே....**

**முன்பக்கத் தொடர்ச்சி**

ஒருவன் தனது தந்தையை பார்த்து "பயப்படாதே அப்பா! நான் நன்றாக இருக்கிறேன். தைரியமாக இரு" என கூறிய கவலை நிறைந்த வார்த்தைகள் சமூக வலைத்தளங்களினூடாக பரிமாறிக்கொண்டிருக்கின்றன.

**பள்ளிக்குள்....**

**முன்பக்கத் தொடர்ச்சி**

தெரிவித்துள்ள கருத்து குறித்து மௌபிம சுரக்ஷா அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

120 வருடங்கள் பழமை மிகு மஹர பள்ளிவாசலை மீட்டெடுப்பு தொடர்பாக மேற்படி அமைப்பு ஜனாதிபதி அலுவலகப் பணிப்பாளர் துசித கல்லொழுவையைச் சந்தித்துப் பேசிய போது துசித கல்லொழுவ நிதி அமைச்சரிடம் இது தொடர்பாக பிரஸ்தாபித்துள்ளார். இதற்கு நிதி அமைச்சர் அளித்த பதில் இந்தப் பள்ளிவாசலுக்குள் தூள் வியாபாரம் நடைபெறுவதனால் அதனை திருப்பி அளிக்க முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் இக்கூற்றை (மௌபிம சுரக்ஷா அமைப்பு) நாட்டைப் பாதுகாக்கும் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இஸ்லாமிய விரோத சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பது பற்றியும் சுரக்ஷா அமைப்பு சுட்டிக்காட்டி உள்ளது.

இவற்றை மீட்பது தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்தபோது இம்மாதம் 20ஆம் திகதிக்குள் பள்ளிவாசல் தொடர்பாக ஜனாதிபதியின் தரப்பில் இருந்து நல்ல முடிவொன்று கிடைக்குமென்று துசித கல்லொழுவ தெரிவித்ததாக மௌபிம சுரக்ஷா அமைப்பின் தலைவர் ஷம்ஸ் மஃரூப் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் விரோத சுவரொட்டிகள் வரையப்பட்டிருப்பது பற்றியும் சுரக்ஷா அமைப்பு நடாத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளது. பன்றி ஒன்றைக் கீறி ஹலால் பொக் அப்பத்தின் கீழ் எழுதப்பட்டுள்ளது. ஹராமா ஹலாலா என்றும் பள்ளிவாசலுக்குள் எழுதப்பட்டுள்ளது. இவற்றின் மாதிரிப் படங்கள் காட்டப்பட்டுள்ளன. இப்போது பொலிஸார் அவற்றை அகற்றி இருப்பதாக ஷம்ஸ் மஃரூப் தெரிவித்தார்.

**போரை....**

**முன்பக்கத் தொடர்ச்சி**

மக்களுக்கு தேவையான மனிதாபிமான உதவிகளை வழங்க வழிவிடக் கோரியும் கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்திற்கு அருகாமையில் மாபெரும் மக்கள் எழுச்சி போராட்டம் இன்று ஜும்ஆ தொழுகையை தொடர்ந்து நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், அரசியல்வாதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என பெருந்தொகையினர் கலந்துகொண்டனர்.

**நஸீர்....**

**முன்பக்கத் தொடர்ச்சி**

முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் பதவியில் இருந்து நஸீர் அஹமட் நீக்கப்பட்டுள்ளதால், ஏனைய கட்சிகளில் இருந்தும் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கிக் கொண்டிருக்கும் உறுப்பினர்கள் தொடர்பாகவும் கேள்விகள் எழுந்துள்ளன.

குறிப்பாக அமைச்சர்களான மனிச நாணயகார, ஹரின் பெர்னாண்டோ மற்றும் டயான கமகே, அரவிந்தகுமார், வடிவேல் சுரேஸ் மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனவில் இருந்து விலகிச் சுயாதீனமாகச் செயற்பட்டு வரும் டளஸ் அழகபெருமா, விமல் வீரவன்ச ஆகியோரின் கட்சி உறுப்புரிமைகளும் நீக்கப்பட வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுன ஆகிய கட்சிகளே தமது உறுப்பினர்கள் தொடர்பாக சபாநாயகரிடமும் தேர்தல்கள் ஆணைக்குழுவிடமும் சுட்டிக்காட்டியுள்ளன.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்திற்கு கட்சியின் தீர்மானத்தை மீறி நசீர் அஹமட் வாக்களித்தார் என்ற குற்றச்சாட்டில் அவர், முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டிருந்தார்.

இதற்கு எதிராக நசீர் அஹமட் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்த நிலையில், முஸ்லிம் காங்கிரஸின் உறுப்புரிமையிலிருந்து நசீர் அஹமட் நீக்கப்பட்டமை சரியானது என சென்ற ஆறாம் திகதி உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. .

இதனையடுத்தே ஏனைய கட்சிகளில் இருந்தும் விலகி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கும் சில உறுப்பினர்கள் தொடர்பாகவும் சர்ச்சை எழுந்துள்ளது.

உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை, விசேட சட்டத்தரணிகள் அடங்கிய குழுவின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளதாகவும் இதனை முன் மாதிரியாக எடுத்துப் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு கட்சிகளும் தீர்மானங்களை எடுக்க முடியுமெனவும் அமைச்சர் அமைச்சர் ஹாபீஸ் நஷீர் தெரிவித்தார்.

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து மனிச நாணயக்கார ஹரின் பெர்னாண்டோ, டயான கமகே மற்றும் அரவிந்தகுமார் வடிவேல் சுரேஸ் ஆகியோர் விலகி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குகின்றனர்.

இவர்களில் மனு நாணயக்கார, ஹரின் பெர்ணாண்டோ ஆகியோர் அமைச்சுப் பதவிகளையும் வகிக்கின்றனர்.

அதேவேளை, ஶ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனவில் இருந்து விலகிச் சுயாதீனமாகச் செயற்பட்டு வரும் டளஸ் அழகப்பெருமா தலைமையிலான அணியும். விமல் வீரவன்ச தலைமையிலான அணியும் பெரமுன உறுப்புரிமையில் இருந்து நீக்கப்பட்டு அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவியும் பறிக்கப்படும் என பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் அறிவித்துள்ளார்.

இது குறித்து பெரமுனவின் சட்டக் குழு ஆராய்ந்து வருவதாகவும் அவர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை நஸீர் அஹமட்டின் நாடாளுமன்ற ஆசன வெற்றிடத்திற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானா நியமிக்கப்படவுள்ளார்.

உயர் நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் நஸீர் அஹமட்டின் ஆசனம் வெற்றிடமாகியுள்ளதாக நாடாளுமன்றத்தின் பொதுச் செயலாளர் குஷானி ரோஹணதீர தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளதையடுத்து அலி ஸாஹிர் மௌலானா நியமிக்கப்பட்டுள்ளார்.

அடுத்த நாடாளுமன்ற அமர்வில் அவர் பதவியேற்கவுள்ளார்.

இதேவேளை, உயர் நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் வேறு கட்சிகளில் இருந்து விலகி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கும் உறுப்பினர்களின் நிலைமை தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை அமைத்து ஆலோசிக்கவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் கூறுகின்றன.

அதேவேளை, அமைச்சர்களாக மனிச நாணயக்கார, ஹரின் பெர்ணாண்டோ ஆகியோரும் டளஸ் அழகபெருமா, விமல் வீரவன்ச ஆகியோர் தலைமையிலான அணியும் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்குவதால் அவர்களைக் கட்சி உறுப்புரிமையில் இருந்து நீக்க முடியாதெனவும் ஆனாலும் அது குறித்து பரிசீலிப்பதாகவும் அமைச்சர் ஹாபீஸ் நஷீர் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

**04ம் பக்கத் தொடர்ச்சி**

**2024....**

சிக்கிய நாட்டைப் படிப்படியாக சர்வதேச ஒத்துழைப்புடன் மீட்டெடுப்பதில் ஓரளவு வெற்றி கண்டுள்ளார். ஆனால், அவரது தாராளவாத சிந்தனைப் போக்கு வரவேற்கக் கூடியதாக இருந்த போதும் நாட்டின் பொருளாதாரம் பின்னடைவுக்கே அதை வழிவகுப்பதாகத் தெரிகிறது. உலக நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற அவர் பகீரதப்பிரயத்தனம் செய்து வருகின்றார். ஆனால், உள்நாட்டு இன நெருக்கடிக்குத் தீர்வு தேடுவதில் அவர் இன்னமும் பின்தங்கியவராகவே காணப்படுகின்றார். என்னதான் அரசியல் வியூகங்களைக் கையாண்டு தேர்தலொன்றுக்கு முகம் கொடுத்தாலும் பெரும்பான்மை மக்களின் ஆதரவை அவரால் பெற முடியுமா? என்பது சந்தேகமே!

பெரும்பான்மை மக்களின் வாக்கு வங்கி சஜித், அநுரகுமார பக்கம் ஓரளவு அதிகரிக்கும் போது சுதந்திரக் கட்சியோடு புதிதாக களமிறங்கத் தொடங்கியுள்ள "தாயக மக்கள் கட்சி" என்ற (மவ்பிம ஜனதாபக்ஷய) திலீப் ஜயவீர தலைமையில் போட்டியிடத் தயாராகி வருகின்றது.

இவ்வாறான சவால்களுக்கு மத்தியில் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் வியூகம் எந்த அளவுக்கு எடுபடப் போகின்றது என்பது பெரும் கேள்விக்குறியாகும். இன்று மக்கள் செல்வாக்கு தேசிய மக்கள் சக்தி ஜேவிபிக்கும் ஐக்கிய மக்கள் சக்தி பக்கமும் அலைமோதிக்கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. இதில் சஜித் பிரேமதாசவை விட அனுரகுமார திசாநாயக்க முன்னிலை வகிப்பதை வெளிப்படையாகக் காண முடிகிறது. அடுத்து வரக்கூடிய மாதங்கள் இலங்கை அரசியல் களத்தில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தப் போகின்றது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியுள்ளது.

***



# கிரிக்கெட் உலகக் கிண்ணம் 2023

# ஒரு பார்வை

அப்ரித் வஸீர்





13 ஆவது உலகக் கிண்ணத் தொடர் இந்தியாவில் கடந்த 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.மொத்தம் 48 போட்டிகளைக் கொண்ட தொடராக இது அமைந்துள்ளது.இதுவரையில் 9 போட்டிகள் நடைபெற்றுள்ளன.(கட்டுரையை வாசிக்கும் போது எண்ணிக்கை மாறியிருக்கும்)இதன்படி நியுசிலாந்து ,பாகிஸ்தான் மற்றும் இந்திய அணிகள் விளையாடிய இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளது.அதனடிப்படையில்,

அட்டவணையில் நியுசிலாந்து முதலாமிடம்,இந்தியா இரண்டாவது ,பாகிஸ்தான் மூன்றாவது மற்றும் சவுத்ஆப்ரிக்கா நான்காவது இடத்தையும் பிடித்துள்ளது.அடுத்தடுத்த போட்டிகளின் வெற்றி –தோல்விகளை வைத்தே புள்ளி அட்டவணை நிர்ணயிக்கப்படும்.எனினும் இந்தத் தொடர் மிகவிருவிருப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றதை கிரிக்கெட் இரசிகர்களின் ஆர்வத்தை சமூக வலைத்தளங்களில் காணமுடிகின்றது.

முதல் உலகக் கிண்ணப் போட்டி 1975 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. முதலில் ஒரு நாள் கிரிக்கெட் என்பது 60 ஓவர்களாக நடத்தப்பட்டது பின்னர் 1987 ஆம் ஆண்டு 50 ஓவர்களாக குறைக்கப்பட்டது. உலகக்கோப்பை என்பது 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை வெவ்வேறு நாடுகளால் நடத்தப்படும்.

இதன்படி 1975 ஆம் ஆண்டு இப்போட்டியை இங்கிலாந்து நடத்தியது. இந்தத் தொடர் 60 வது ஓவர்களாக நடத்தப்பட்டது. இதன் இறுதி போட்டியில் அவுஸ்திரேலியா, மேற்கிந்திய தீவுகள் அணிகள் விளையாடின, இதில் மேற்கிந்திய அணி கிண்ணத்தை வென்றது.

1979 ஆம் ஆண்டு மீண்டும் இங்கிலாந்து அணி உலகக்கிண்ணத்தை நடத்தியது. இதில் மேற்கிந்திய தீவுகள் மற்றும் இங்கிலாந்து அணிகள் இறுதிப்போட்டிக்கு சென்று மேற்கிந்திய தீவுகள் அணி மீண்டும் உலகக்கிண்ணத்தை வென்றது.

1983 ஆம் ஆண்டு இங்கிலாந்து அணி உலகக்கிண்ணத்தை நடத்தியது. இதில் இந்தியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகள் இறுதிப்போட்டிக்கு சென்றது. இதில் முதல் முறையாக இந்தியா 43 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிப் பெற்றுக் உலகக் கிண்ணத்தை வென்றது.

1987 ஆம் ஆண்டு முதல் முறையாக ஒரு நாள் உலகக் கிண்ணத் தொடரை 50 ஓவர்களாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் சேர்ந்து நடத்தியது. இதில் இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் இறுதிப்போட்டிக்குச் சென்று அவுஸ்திரேலியா உலகக்கிண்ணத்தை வென்றது.

1992 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகள் உலகக் கிண்ணத்தை சேர்ந்து நடத்தியது. இதில் பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து அணிகள் இறுதிப்போட்டிக்குச் சென்று பாகிஸ்தான் உலகக் கிண்ணத்தை வென்றது.

1996 ஆம் ஆண்டு இந்தியா மற்றும் பாகிஸ்தான் இணைந்து உலகக் கிண்ணத்தை நடத்தியது. இதில் இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் இறுதிப்போட்டிக்குச் சென்று இலங்கை அணி கிண்ணத்தை வென்றது.

1999 ஆம் ஆண்டு இங்கிலாந்து அணி உலகக் கிண்ணத் தொடரை நடத்தியது. இதில் அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் இறுதிப்போட்டிக்குச் சென்று அவுஸ்திரேலியா கிண்ணத்தை வென்றது.

2003 ஆம் ஆண்டு தென்னாபிரிக்கா அணி உலகக் கிண்ணத் தொடரை நடத்தியது. இதில் அவுஸ்திரேலியா மற்றும் இந்தியா அணிகள் இறுதிப்போட்டிக்குச் சென்று அவுஸ்திரேலியா அணி கிண்ணத்தை வென்றது.

2007 ஆம் ஆண்டு மேற்கிந்திய நாடு உலகக் கிண்ணத் தொடரை நடத்தியது. இதில் இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் இறுதிப்போட்டிக்குச் சென்று அவுஸ்திரேலியா கிண்ணத்தை வென்றது.

2011 ஆம் ஆண்டு இந்தியா மற்றும் பங்களாதேஷ் உலகக் கிண்ணத் தொடரை நடத்தியது. இதில் இந்தியா மற்றும் இலங்கை அணிகள் இறுதிப்போட்டிக்கு சென்று இந்தியா கிண்ணத்தை வென்றது.

2015 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்துச் சேர்ந்து உலகக் கிண்ணத் தொடரை நடத்தியது. அதில் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து அணிகள் இறுதிப்போட்டிக்குச் சென்று அவுஸ்திரேலியா கிண்ணத்தை வென்றது.

2019 ஆம் ஆண்டு இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் சேர்ந்து உலகக் கிண்ணத் தொடரை நடத்தியது. இதில் இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து அணிகள் இறுதிப்போட்டிக்குச் சென்றது. இதில் இங்கிலாந்து கிண்ணத்தை வென்றது.

2023 உலகக் கிண்ணத்தை இந்திய நடத்தி வருகின்றது.இந்த முறை யார் கிண்ணத்தை வெல்வார்கள் என்ற வாதப்பிரதிவாதங்கள் கிரிக்கெட் இரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இந்த முறை 10 அணிகள்!

2027 மற்றும் 2031 ஆம் ஆண்டுகளில் நடைபெற உள்ள 50 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளில் 14 அணிகளை அனுமதிக்க சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) முடிவு செய்துள்ளது.

ஐம்பது ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளில் சுவாரசியத்தைக் கூட்டும் வகையில் பலமான 10 அணிகள் மட்டும் பங்கேற்கும் தொடராக சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் கடந்த 2015 இல் மாற்றியது. அதன்படி 2019 இல் இங்கிலாந்தில் நடைபெற்ற 50 ஓவர் கிரிக்கெட் போட்டிகளில் 10 அணிகள் மட்டுமே பங்கேற்றன. இந்த முறை (2023 ஆம் ஆண்டு இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 50 ஓவர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளிலும் 10 அணிகள் மட்டுமே பங்கேற்றுள்ளன.

13 வது உலகக் கிண்ணம்!

13வது 50 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியாவில் ஒக்டோபர் 5ஆம் திகதி தொடங்கப்பட்டு நவம்பர் 19ஆம் திகதி வரை நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்பு, 1987, 1996, 2011ஆம் ஆண்டுகளில் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் ஆட்டங்கள் இந்தியாவில் நடைபெற்றிருந்தாலும் பிற நாடுகளுடன் இணைந்தே அந்த தொடர்களை இந்தியா நடத்தியது. தற்போது முதன்முறையாக நடப்பு உலகக் கோப்பை தொடரின் அனைத்து ஆட்டங்களும் இந்தியாவிலேயே நடைபெறவுள்ளது.

கடைசியாக நடைபெற்ற மூன்று 50 ஓவர்கள் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரிலும் போட்டியை நடத்திய அணிகளே வெற்றி பெற்றுள்ளன. எனவே, இந்த முறை தொடரை நடத்தும் இந்திய அணி கோப்பையை வசமாக்குமா என்று இந்திய கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு எழுந்துள்ளன.


இந்த தொடரில் மொத்தம் 10 அணிகள் பங்கேற்கின்றன. இந்தியா, ஆப்கானிஸ்தான் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, வங்கதேசம், நியூஸிலாந்து, பாகிஸ்தான், தென் ஆப்பிரிக்கா ஆகிய 8 அணிகள் நேரடியாக கலந்துகொள்ள தகுதி பெற்றன. இலங்கை, நெதர்லாந்து ஆகிய அணிகள் தகுதிச் சுற்றில் முதல் இரண்டு இடங்களை பிடித்து உலகக் கோப்பைக்கு தகுதிபெற்றன.

ரௌண்ட் ராபின் சுற்று!

கடந்த 2019ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கோப்பை தொடரை போலவே இந்த தொடரிலும் ரௌண்ட் ராபின் முறையில் ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. அதன்படி, ஒவ்வொரு அணியும் மீதமுள்ள 9 அணிகளுடன் ஒருமுறையேனும் விளையாடும்.

9 ஆட்டங்களில் 7 ஆட்டங்களில் வெற்றி பெறுவதன் மூலம் ஒரு அணி அரையிறுதிக்கு முன்னேற முடியும். ரௌண்ட் ராபின் சுற்றின் முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரை இறுதிப் போட்டிக்கு முன்னேறும்.

ரௌண்ட் ராபின் சுற்றில் முதல் இடத்தை பிடிக்கும் அணியும் 4வது இடத்தை பிடிக்கும் அணியும் முதல் அரையிறுதிச் சுற்றில் விளையாடும். 2வது, 3வது இடங்களை பிடிக்கும் அணிகள் 2வது அரையிறுதிப் போட்டியில் விளையாடும். அரையிறுதிப் போட்டிகளில் வெற்றிபெறும் அணிகள் நவம்பர் 19ஆம் திகதி அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெறும் இறுதிப்போட்டியில் விளையாடும்.





மழை காரணமாக அரையிறுதி, இறுதிப் போட்டிகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக அவற்றுக்கு மட்டும் ரிசர்வ் டே உண்டு என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பரிசுத்தொகை!

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடருக்கான மொத்த பரிசுத் தொகை ரூ. 83.06 கோடி ஆகும். சாம்பியன் பட்டத்தை வெல்லும் அணிக்கு பரிசாக ரூ.33.22 கோடி வழங்கப்படும். இறுதிப் போட்டியில் தோல்வி அடையும் அணிக்கு ரூ.16.61 கோடி வழங்கப்படும். அரையிறுதிப் போட்டியில் தோல்வி அடைந்து வெளியேறும் இரு அணிகளுக்கும் தலா ரூ.6.64 கோடி வழங்கப்படும்.

இதுபோக, அரையிறுதிக்கு தகுதிபெறாமல் லீக் ஆட்டங்களின் முடிவில் வெளியேறும் 6 அணிகளுக்கும் தலா ரூ. 83 லட்சம் வழங்கப்படும். லீக் சுற்றைப் பொருத்தவரை ஒவ்வொரு ஆட்டத்திலும் வெற்றிபெறும் அணிக்கு ரூ. 33 லட்சம் வழங்கப்படும்.

மைதான நிலவரம்!

இந்தியாவில் 10 மைதானங்களில் மொத்தம் 48 ஆட்டங்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு மைதானங்களில் தலா ஐந்து ஆட்டங்கள் நடைபெறுகின்றன. ஹைதராபாத்தில் உள்ள ராஜிவ் காந்தி மைதானத்தில் மட்டும் 3 ஆட்டங்கள் நடைபெறுகின்றன.

எம்.ஏ. சிதம்பரம் மைதானம், சென்னை

சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ. சிதம்பரம் மைதானத்தில் இந்த முறை இந்திய அணி விளையாடும் ஒரு ஆட்டம் உட்பட 5 லீக் ஆட்டங்கள் நடைபெறுகின்றன.

இந்தியா – அவுஸ்திரேலியா, அக்டோபர் 8ஆம் திகதி

நியூசிலாந்து – வங்கதேசம், அக்டோபர் 14ஆம் திகதி

நியூசிலாந்து – ஆப்கானிஸ்தான், அக்டோபர் 18ஆம் திகதி

பாகிஸ்தான் – ஆப்கானிஸ்தான், அக்டோபர் 23ஆம் திகதி

பாகிஸ்தான் – தென் ஆப்ரிக்கா, அக்டோபர் 27ஆம் திகதி

நரேந்திர மோதி மைதானம், அஹ்மதாபாத்!

இங்கிலாந்து – நியூசிலாந்து, அக்டோபர் 5ஆம் திகதி

இந்தியா – பாகிஸ்தான், அக்டோபர் 14ஆம் திகதி

இங்கிலாந்து – அவுஸ்திரேலியா, நவம்பர் 4ஆம் திகதி

தென் ஆப்ரிக்கா – ஆப்கானிஸ்தான், நவம்பர் 10ஆம் திகதி

இறுதிப் போட்டி, நவம்பர் 19ஆம் திகதி

சின்னசாமி மைதானம், பெங்களூர்

அவுஸ்திரேலியா – பாகிஸ்தான், அக்டோபர் 20ஆம் திகதி

இங்கிலாந்து – இலங்கை, அக்டோபர் 26ஆம் திகதி

நியூசிலாந்து – பாகிஸ்தான், நவம்பர் 4ஆம் திகதி

நியூசிலாந்து – இலங்கை, நவம்பர் 9ஆம் திகதி

இந்தியா – நெதர்லாந்து, நவம்பர் 12ஆம் திகதி

அருண் ஜேட்லி மைதானம், டெல்லி

தென் ஆப்ரிக்கா – இலங்கை, அக்டோபர் 7ஆம் திகதி

இந்தியா – ஆப்கானிஸ்தான், அக்டோபர் 11ஆம் திகதி

இங்கிலாந்து – ஆப்கானிஸ்தான், அக்டோபர் 15ஆம் திகதி

அவுஸ்திரேலியா – நெதர்லாந்து, அக்டோபர் 25ஆம் திகதி

பங்களாதேசம் – இலங்கை

நவம்பர் 6ஆம் திகதி

ஹிமாச்சல பிரதேச கிரிக்கெட் சங்க மைதானம், தர்மசாலா

பங்களாதேசம் – ஆப்கானிஸ்தான், அக்டோபர் 7ஆம் திகதி

இங்கிலாந்து – பங்களாதேசம், அக்டோபர் 10ஆம் திகதி

தென் ஆப்ரிக்கா – நெதர்லாந்து, அக்டோபர் 17ஆம் திகதி

இந்தியா – நியூசிலாந்து, அக்டோபர் 22ஆம் திகதி

அவுஸ்திரேலியா– நியூசிலாந்து, அக்டோபர் 28ஆம் திகதி

ஈடன் கார்டன்ஸ், கொல்கத்தா

நெதர்லாந்து – பங்களாதேசம் , அக்டோபர் 28ஆம் திகதி

பாகிஸ்தான் – பங்களாதேசம் , அக்டோபர் 31ஆம் திகதி

இந்தியா – தென் ஆப்ரிக்கா, நவம்பர் 5ஆம் திகதி

இங்கிலாந்து – பாகிஸ்தான், நவம்பர் 11ஆம் திகதி

2வது அரையிறுதி, நவம்பர் 16ஆம் திகதி

பாரத் ரத்னா அடல் பிஹாரி வாஜ்பாயி கிரிக்கெட் மைதானம், லக்னோ

அவுஸ்திரேலியா – தென் ஆப்ரிக்கா, அக்டோபர் 12ஆம் திகதி

அவுஸ்திரேலியா – இலங்கை, அக்டோபர் 16ஆம் திகதி

நெதர்லாந்து – இலங்கை, அக்டோபர் 21ஆம் திகதி

இந்தியா – இங்கிலாந்து, அக்டோபர் 29ஆம் திகதி

நெதர்லாந்து – ஆப்கானிஸ்தான், நவம்பர் 3 ஆம் திகதி

வான்கடே மைதானம், மும்பை

இங்கிலாந்து – தென் ஆப்ரிக்கா, அக்டோபர் 21ஆம் திகதி

தென் ஆப்ரிக்கா – பங்களாதேசம், அக்டோபர் 24ஆம் திகதி

இந்தியா – இலங்கை, நவம்பர் 2ஆம் திகதி

அவுஸ்திரேலியா – ஆப்கானிஸ்தான், நவம்பர் 7ஆம் திகதி

முதல் அரையிறுதி, நவம்பர் 15ஆம் திகதி

எம்.சி.ஏ. சர்வதேச மைதானம், புனே

இரண்டாவது அரையிறுதி நவம்பர் 16 ஆம் திகதி கொல்கத்தாவில்

இறுதிப்போட்டி நவம்பர் 19 ஆம் திகதி அஹ்மதாபாத்தில் நடைபெறவுள்ளது.

இப் பத்திரிகை 15.10.2023 அன்று மாஸ்டர் பிரின்டர்ஸ் நிறுவனத்தினால் 78/1, டயஸ் பிளேஸ் கொழும்பு 12 எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.